www.padippakam.com

வ., டிச'92 மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ் விலை: ரூ.2.50

# புதிய கலாச்சாரம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE ; FRANCE



## ராமனை எரிப்போம்
## மீண்டும் தீ பரவட்டும்!

படிப்பகம்

www.padippakam.com



மாஸ்கோ நவம்பர் புரட்சி ஊர்வலம்: லெனின், ஸ்டாலின் படங்கள் ஏந்திய 50,000 மக்கள் எல்சினை எதிர்த்து முழக்கம் எழுப்பினர்.

# நவம்பர் புரட்சி விழா

திருச்சியில் நவம்பர் 7, 1992 அன்று மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி இணைந்து நடத்திய நவம்பர் புரட்சி விழா புதிய முறையில் அமைந்தது. தோழர்கள் வீடுகளுக்கு வெள்ளையடித்து சுத்தப்படுத்தினர். முதல் நாள் இரவு வீடுகளில் அரிவாள் சுத்தியல் சின்னம் மின் விளக்கால் அலங்கரிக்கப்பட்டு வீட்டு முகப்பில் மின்னியது. சிவப்புத் தோரணங்களாலும், வண்ண சர விளக்குகளாலும் அலங்கரித்து 'நவம்பர் புரட்சி நீடூழி வாழ்க' என முழக்கம் எழுதி வைத்தனர். 'நவம்பர் புரட்சி விழாவுக்கு' என இனிப்புகள் செய்து நண்பர்கள், அக்கம் பக்கத்து வீடுகளுக்குக் கொடுத்தனர். சிறுவர்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்ந்தனர் ''என்ன தீபாவளியை இவர்கள் இப்பொழுது கொண்டாடுகிறார்களே '' என கேட்டவர்களுக்கு நவம்பர் புரட்சி விழாவைப் பற்றி விளக்கினர். கம்யூனிஸ்டுகளின் குடும்பங்களில் மகிழ்ச்சிக்கு இடமில்லை, திருவிழா, பண்டிகை இல்லை என்ற நிலையை மாற்றி கலாச்சார வெற்றிடம் நிரப்பப்பட்டது.

நவம்பர் புரட்சிநாளில் தோழர்கள் புத்தம்புது சிவப்புச்சட்டை, வேட்டி சீருடை அணிந்து அதேபோல பெண்கள், சிறுவர்களும் அவர்களுக்கு எற்ற சீருடை அணிந்து கொடியேற்று விழாவில் பங்கேற்றனர். திருச்சி தில்லைநகர் காந்திபுரத்தில் ம.க.இ.க சார்பில் தோழர். முத்து(ம.க.இ.க) கொடியேற்றி நவம்பர் புரட்சி வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார். மார்க்சிய-லெனினிய ஆசான்களின் படங்கள் அலங்கரிக்கப்பட்டு சிவப்புதோரணங்கள் கட்டப்பட்டு அப்பகுதி புதுப் பொலிவுடன் விளங்கியது. அதே நேரத்தில் புத்தூர் திரு.வி.க.நகரில் பு.மா.இ.மு. சார்பில் தோழர். ஜெகதீசன் கொடியேற்றி வாழ்த்து தெரிவித்தார்.

பகுதிகளிலும் பகல் முழுவதும் பேச்சு, பாடல் ஒலிபரப்பப்பட்டது.

பொன்மலை ஆர்மரிகேட்டில் ரயில்வே தொழிலாளர்கள் சங்கம் சார்பில் படங்கள் வைத்து அலங்கரிக்கப்பட்டு கொடியேற்றப்பட்டது. பாடல் ஒலிபரப்ப போலீஸ் அனுமதி மறுத்துவிட்டது.

பகலில் அனைத்து தோழர்களும் கலந்துகொண்ட அரங்கக் கூட்டம் 10 மணி முதல் 4 மணி வரை உற்சாகமுடன் நடந்தது. நவம்பர் புரட்சியின் படிப்பினைகள், தோழர் ஸ்டாலின் பற்றி தோழர்கள் எழுச்சியுரையாற்றினர். தோழர்கள் கவிதை வாசித்தனர் அதிக அளவில் இக்கூட்டத்தில் பெண்கள் கலந்து கொண்டனர். பகல் உணவு கூட்டாக சமைத்து பரிமாறினர். பிறப்பால் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த தோழர்களும் இருந்த போதும் 'மாட்டுக்கறி' வறுவல் அனைவருக்கும் தரப்பட்டது. 'மாட்டுக்கறி' ஒரு குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே உண்பது என்ற கலாச்சார ரீதியான கருத்தை உடைப்பதற்கு அது ஒரு சாதாரண புலால் உணவு என்பதை நிலை நாட்ட அவ்வாறு செய்யப்பட்டது.

மாலையில் திருச்சி புத்தூர் திரு.வி.நகரில் நவம்பர் புரட்சி கலை விழா நடைபெற்ற இடம் அலங்கரிக்கப்பட்டது. விழாவிற்கு தோழர். தமிழ்மணி (ம.க.இ.க) தலைமை தாங்கினார். தோழர்கள் முத்து (ம.க.இ.க), ஜெகதீசன், சூரியமதி (பு.மா.இ.மு), முருகானந்தம் (ர.தொ.ச) ஆகியோர் நவம்பர் புரட்சியின் சிறப்புகளைப் பற்றியும் அதை உழைக்கும் மக்கள் ஒரு மகிழ்ச்சிநாளாக கொண்டாடுவதின் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார்கள் சிறுவர்களின் கலைநிகழ்ச்சி (பாடல்) நடைபெற்றது.

பெண்களே தயாரித்து, இயக்கி, நடித்த நாடகங்கள் நடைபெற்றன.

பேய் பிடித்திருப்பவர்களுக்கு பேய் ஓட்டுதல், சாமிவந்து ஆடி அருள்வாக்கு சொல்லுதல், நோய்வாய்ப் பட்டிருப்பவர்களுக்கு மந்திரித்தல், கை பார்த்து ஜோசியம் சொல்லுதல் போன்ற மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகள் மோசடிக்காரர்களை அம்பலப்படுத்துதாகவும் மக்களின் அறியாமையை போக்குவதாகவும் மிகச் சிறப்பாக நடைபெற்று வரவேற்பைப் பெற்றது.

பெண்கள் நடத்திய 'பெண் பார்க்கும் படலம்'என்ற நாடகம் வரதட்சணை கொடுமையை மையமாக வைத்து அரங்கேற்றப்பட்டது. பெண் தோழர்களின் சிறந்த நடிப்பை வரவேற்றும் தங்கள் தங்கள் குடும்பங்களில் நடப்பதை அப்படியே சித்தரிப்பதாகவும் பல பெண்கள் பேசிக் கொண்டனர்.

அடுத்து தோழர்கள் நிர்மலா (ம.க.இ.க), சேகர் (பு.மா.இ.மு) ஆகியோர் கவிதை பாடினர். கலைவிழாவின் இறுதியில் 'ராமன் - இரட்டைக் கொலை வழக்கு' எனும் நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இரவு 10 மணிக்கு நவம்பர் புரட்சிகரக் கலைவிழா மிகச்சிறப்பாக முடிவடைந்தது. முடியும் தருவாயில் மழை கொட்டிய போதும் பொது மக்கள் கலைந்து போகவில்லை. அதிகமாக அளவில் பெண்கள் வந்தார்கள்.

பிற்போக்கு மத பண்டிகைகள் / திருவிழாக்களுக்கு மாற்றாக, சீரழிவு, கலாச்சார விழாக்களுக்கு மாற்றாக ஆதிலும் குறிப்பாக மக்களை சிந்திக்கத் தூண்டும் மக்களின் கலைவிழாவாக இந்நவம்பர் புரட்சி கலை விழா அமைந்தது.

இதேபோன்று ம.க.இ.க.வின் கிளைகள் உள்ள பிற பகுதிகளிலும் நவம்பர் புரட்சித் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ம.க.இ.க.வின் தோழமை அமைப்புகளான விவசாயிகள் விடுதலை முன்னணி மற்றும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகியவையும். இதை வெகு சிறப்பாகக் கொண்டாடின. அவற்றில் சிலவற்றை இங்கே தருகிறோம்.

**உசிலை வட்டம்:** இங்குள்ள பி.மேட்டுப்பட்டி கிராமத்தில் வி.வி.மு. நவம்பர் புரட்சி நாள் கொண்டாடியது. சிகப்பு பதாகையினால் அலங்கரிக்கப்பட்ட அரங்கம் அமைத்து, கொட்டகை, கொடி, தோரணங்கள்கட்டி மார்க்சிய-லெனினியத் தலைவர்களது படங்கள் எடுப்பாக வைக்கப்பட்டன. மாலையில் குழந்தைகள் நிகழ்ச்சி நடந்தது. உற்சாகமான பாடலும், கதையும் சொல்லி ஊரில் உள்ள சிறுவர்களை எல்லாம் கூட்டிவிட்டனர். ஒருமணிநேரம் சிறுவர்களின் கலகலப்பான நிகழ்ச்சி நடந்தது. தீண்டாமை ஒழிக்கும் இயக்கத்தின் ஒரு பகுதியாக மாட்டுக்கறி சமைத்து நூற்றுக்கும் மேற்பட்ட மக்களுக்கு விருந்து வைக்கப்பட்டது. வி.வி.மு.வின் முன்னணித் தோழர்கள் சிவகாமு, தனம், குருசாமி பங்கு கொண்ட நவம்பர் புரட்சிக் கருத்தரங்கம் 2 மணி நேரம் நடந்தது. இரவு மூன்று ''வீடியோ'' திரைப்படங்கள் காட்டப்பட்டன.

படிப்பகம்

➜ தொடர்ச்சி பின் அட்டை உட்புறம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

● போர்: 10
● குரல்: 6,7
● நவ, டிச. '92

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டுச் சந்தா: ரூ.30

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 8

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

ஆர்.சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.

# தீ பரவட்டும்!

தமிழக ஆட்சியை, பார்ப்பன ஜெயலலிதா கும்பலின் ஆட்சி என்று வரையறுப்பதையும், ஜெயா ஆட்சியில் தமிழகத்தில் பார்ப்பனக் கும்பல் புதுவேகத்துடன் தலையெடுப்பதைச் சுட்டிக் காட்டியும், பாரதிய ஜனதாவிற்கும் இந்தக் கும்பலுக்கும் உள்ள நெருக்கம் பற்றி எச்சரித்தும் நாம் எழுதியபோது சிலர் அதை அலட்சியப் படுத்தினர்; பார்ப்பன எதிர்ப்பு என்பதை வலிந்து, மிகையாகச் செய்வதாகவும் தமிழகத்தைப் பொருத்தவரை இது 'செத்தப்பாம்பை அடிக்கும் வேலை' என்று சில மேதாவிகள் முணுமுணுத்தனர்; ''தமிழகத்திலாவது பார்ப்பனீயம் தலையெடுப்பதாவது இது பெரியார் பிறந்த மண்ணாக்கும்'' என்று சிலர் வீரவசனம் பேசித் தமது செயலற்ற நிலைக்கு நியாயம் கற்பித்தனர். இவர்களுக்கெல்லாம் நாம் பக்கம் பக்கமாக எழுதியும் புரிய வைக்க முடியாததை, தனது ஒரே ஒரு அறிக்கையின் மூலம் இந்து முன்னணித் தலைவர் ராம கோபாலனும், கரசேவைக்கு ஆதரவு தெரிவித்ததன் மூலம் ஜெயலலிதாவும் புரியவைத்து விட்டனர்.

டெல்லியில் ராமலீலா நடத்தி ராவணன் உருவப் பொம்மையை எரிக்கப்போவதாகச் செய்தி வந்தவுடன் இந்த விழா திராவிட இனத்திற்கு எதிராக ஆரியர் பெற்ற வெற்றியைக் கொண்டாடுவதாகும் என்பதால் இதனை ஆட்சேபித்தும், மீறி நடத்தினால் சென்னை பெரியார் திடலில் ''ராவணலீலா நடத்தி ராமன் உருவப் பொம்மையைக் கொளுத்துவோம்'' என்றும் அறிக்கை விட்டார் தி.க.பொதுச்செயலர் வீரமணி. இத்தகைய எதிர்ப்பு தமிழகத்தில் புதியதல்ல; பெரியாரால் இராமன் எதிர்ப்பு, கம்பராமாயண எதிர்ப்பும், மணியம்மை அவர்களால் ராவணலீலாவும் ஏற்கனவே இதே காரணங்களுக்காக நடத்தப்பட்டுள்ளன. ஆனால் ராம கோபாலனின் இந்த அறிவிப்பு இன்று புதியது. மத்தியில் தங்கள் எடுபிடி ஆட்சியும், மாநிலத்தில் தங்கள் பினாமி ஆட்சியும் நடைபெறும் திமிரில் வந்துள்ள அறிவிப்பு. கெட்டுச் சீரழிந்துபோன திராவிட இயக்கத்துக்கும், மங்கியிருக்கும் பார்ப்பன எதிர்ப்பு உணர்வுக்கும் இறுதி அடி கொடுத்து ஒழிக்கும் நினைப்பில் வந்துள்ள அறிவிப்பு; ஒரு பலப்பரீட்சை நடத்திப் பார்க்க பார்ப்பனக் கும்பல் விடுத்துள்ள வெள்ளோட்டம் இது.

பெரியாரின் படத்தைக் கொளுத்துவதாக பார்ப்பனக் கும்பல் அறிவித்தவுடன் நமக்குத் தோன்றும் கோபம், போற்றுதலுக்குறிய ஏதோ ஒன்றை எதிரி இழிவு படுத்துகிறான் என்பதனால் வரும் கோபம் அல்ல; அன்று ரத்தமும் சதையுமாக நந்தனை எரித்ததும், சூத்திரன் என்பதற்காகச் சம்புகனைக் கொன்றதும் இன்று பெரியாரின் படத்தை எரிப்போம் என்பதும் ஒன்றுதான். சநாதனத்திற்கு எதிரான போராட்டத்தின் அடையாளம் பெரியார். அவரது படத்தை எரிப்பதாகக் கூறுவதன் மூலம் ''பறயனே, பஞ்சமனே, சூத்திரனே உனக்குரிய இடத்தைப் புரிந்து கொள்'' என்று மிரட்டுகிறது இந்து முன்னணிப் பார்ப்பனக் கும்பல்.

பார்ப்பன எதிர்ப்பின் சின்னம் பெரியார் என்றால் பார்ப்பன சாம்ராச்சயத்தின் சின்னம் ராமன். சாதி ஆதிக்கம், திராவிட, மற்றும் பூர்வகுடி மக்களுக்கெதிரான ஆரிய நிறவெறி, ஆணாதிக்கம், துரோகம், நயவஞ்சகம், கோழைத்தனம் ஆகிய பார்ப்பனீயத்தின் அனைத்து குணாதிசயங்களுக்கும் ராமனே அடையாளம். இன்று இந்தி-இந்து-இந்தியா என்கிற பாரதிய ஜனதாவின் வெறி முழக்கத்திற்கும் ராமனே அடையாளம், எனவே ராமனைக் கொளுத்துவதென்பது கடவுள் நம்பிக்கைக்கு எதிராக கடவுள் மறுப்புக் கொள்கையுடையவர்களின் நடவடிக்கை அல்ல; சாதி ஆதிக்கத்திற்கு எதிராக சுயமரியாதையும் ஜனநாயக உணர்வும் கொண்ட ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டிய நடவடிக்கை.

மக்களின் மதவுணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் பொதுவுடமையாளர்கள் நடந்து கொள்ளலாமா என்று சிலர் ஐயமெழுப்பலாம். இது வறட்டு நாத்திகவாதம் என்று போலிகம்யூனிஸ்டுகள் கூச்சல் போடலாம். இந்த நடவடிக்கை மக்களின் மதவுணர்வகளைப் புண்படுத்தும் என்றால் அவ்வாறு 'புண்படுத்துவதுதான்' நம் நோக்கம் என்று தெளிவு படுத்திவிடுவோம். ஏனெனில், மற்ற மதங்களுடன் சமமாக ஒப்பிடக்கூடியதல்ல இந்து மதம். அடிமைச் சமுதாயத்தில் அடிமைகளின் பெருமூச்சாகவும், எதிர்ப்புக் குரலாகவும் தோன்றியது கிறித்தவ மதம்; போரிட்டு மடியும் பல்வேறு இனக்குழுக்களுக்கு மத்தியில் சமாதானத்தைத் தோற்றுவிக்கப் பிறந்தது இஸ்லாம்; பண்டைப் பழங்குடிச் சமூகத்திலிருந்து ஈவிரக்கமற்ற கொலைகள் மற்றும் போர்கள் மூலம் அடிமைச் சாம்ராச்சியங்கள் எழுவதைக் காணச்சகிக்காமல் ''ஆசையை அறு, உயிர்க் கொலையை நிறுத்து'' என்ற கோட்பாடுகளை முன்நிறுத்திப் பிறந்தது புத்தமதம். இவை அனைத்துமே காலப்போக்கில் நிறுவனமயமாகி மன்னர்களுக்கும், ஆளும் வர்க்கத்தினருக்குமே சேவை செய்யப் பயன்பட்டன என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் இந்து மதம் தனது தோற்றத்தில் கூட இத்தகைய பாத்திரத்தை ஆற்றவில்லை. ஒடுக்கப்பட்டவர்களின் பெருமூச்சாக 'இந்து மதம்' ஆற்றிய பாத்திரத்தைக் காட்டிலும் ஒடுக்குபவர்களின் ஆயுதமாகச் செயலாற்றியதே இதன் பிரதானப் பணி. இந்துமதத்தின் 'ஆன்மா' இறை நம்பிக்கை அல்ல. வருண தருமம். மனிதர்களை மட்டுமல்ல, அவர்களது உடை, உணவு. மொழி, கடவுள் ஆகிய அனைத்தையும் சாதிவாரியாகப் பிரித்ததுதான் இந்து மதத்தின் சாரம்.வேறு வார்த்தைகளில் சொன்னால் சாதியமைப்பு அல்லது சநாதன தருமம் என்பதுதான் இந்துமதம்.

படிப்பகம்

www.padippakam.com

எனவே சாதி எதிர்ப்பும் இந்து மத எதிர்ப்பும் வேறு வேறல்ல. மார்க்சிய சொற்றொடர்களில் கூறினால் இந்துமதம் சமுதாய அடித்தளத்தில் சாதி வடிவில் உள்ளது. மத நம்பிக்கை என்ற வகையில் மேற்கட்டுமானத்தில் நிலவுகிறது. சாதியை நீக்கிவிட்டால் இந்துமதத்தில் எஞ்சுவது ஏதுமில்லை. இந்த உண்மையை வேறு சொற்களில் பெரியார் முன்வைத்தபோது பூணூல் கம்யூனிஸ்டுகள் அதைப் புறந்தள்ளினர்.இன்று பார்ப்பன வெறியர்கள் தாக்கும்போது 'ராம்-ரகீம்' ''ஈசுவர அல்லா தேரே நாம்'' என்று பஜனை பாடுகின்றனர்.

மத நல்லிணக்கம் என்ற பெயரிலான இந்த காந்திய மோசடிகளால், கடைசியாகக் கண்ட பலன் செருப்புயாத்திரை. செருப்பை கையெடுத்துக் கும்பிடும் தமிழனை, கருத்துரீதியில் பார்ப்பனீயத்தின் வஞ்சகப்பிடியிலிருந்து விடுவிக்க என்ன செய்வது? மற்ற பொருளாதார, அரசியல் கோரிக்கைகளுக்கான போராட்டங்களில் இந்து-முஸ்லீம் பேதமின்றி உழைப்பாளிகளைத் திரட்டினால் அதுவே அவர்களை கருத்துரீதியிலும் விடுவித்து விடுமா? விடுவிக்காது, விடுவிக்கவும் இல்லை என்பதற்கு கேரளத்தில் ஆர்.எஸ்.எஸ்ஸின் வளர்ச்சியே சான்று.

அரசியல், பண்பாட்டு ரீதியில் மிகவும் பின்தங்கிய உ.பி, ம.பி, ராஜஸ்தான் மாநிலங்களைத் தனது தளமாக மாற்றிக் கொண்டிருக்கும் பாரதீய ஜனதா, இந்தியாவிலேயே தனக்கொரு சவாலாக விளங்கும் தமிழகத்தை இப்போது குறி வைத்துள்ளது. பார்ப்பன பாசிச ஜெயா கும்பலின் ஆட்சியில் அதிகார வர்க்கத்தின் முழு ஆதரவுடன் பகிரங்கமாகக் களத்தில் இறங்கியுள்ளது பார்ப்பனக் கும்பல். ''அயோத்தி முழுவதுமே ராமனுக்குச் சொந்தம்'' என்று கொக்கரிக்கிறார் சங்கராச்சாரி. 60 களில் இருந்த பார்ப்பன எதிர்ப்பும், தமிழின உணர்வும் மீண்டும் தலையெடுப்பதாகவும் அதை நசுக்க ஜெயா ஆட்சி நீடிக்க வேண்டும் என்றும் டெல்லிக்கு அறிவுரை கூறுகிறார் கோவிந்தாச்சாரி. யுத்தத்தை எதிரிகள் பிரகடனம் செய்துவிட்டனர். இனி நடுநிலை வகிப்போருக்கும் மவுனம் சாதிப்போருக்கும் இங்கே இடமில்லை. ஒன்று வீடணர்களாகி எதிரியின் தரப்புக்கு ஓடட்டும், அல்லது தீப்பந்தத்துடன் நம்முடன் அணிவகுக்கட்டும்.

ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு ராமனைக் கொளுத்துவோம். இரண்டாயிரம் ஆண்டு பார்ப்பன எதிர்ப்புப் போராளிகள் அனைவரும் நம் பக்கம். உத்திரப் பிரதேசம் ராமஜென்மபூமி என்றால் தமிழகம் ராமனின் மரண பூமி. ●

*அட்டையில்:* சம்பூகன் தவம் செய்கிறான். சூத்திரனான அவன் பார்ப்பானை வணங்காமல் நேரடியாகக் கடவுளை வழிபடுவது சநாதன தருமத்திற்கு எதிரானது என்பதால் திடீரெனச் சென்று ராமன் தாக்கி சம்பூகனை வெட்டிக் கொலை செய்கிறான்.

அட்டை ஓவியம்: மருது
சென்ற இதழ் அட்டை ஓவியம் வரைந்ததும் அவரே, குறிப்பிட விடுபட்டமைக்கு வருந்துகிறோம்.

○ ○ ○

## இந்தியப் புரட்சியின் வரலாறு படிக்க ஓர் அரிய வாய்ப்பு!

'வரலாற்றுத் திருப்புமுனை' என்ற பெயரில் (THE HISTORIC TURNING POINT) 'லிபரேஷன்' தொகுப்பு நூல் (ஆங்கிலம்) வெளிவந்துள்ளது. 1967 நக்சல்பாரி உழவர் எழுச்சியைத் தொடர்ந்து நிறுவப்பட்ட கம்யூனிஸ்ட் புரட்சியாளரின் ஒருங்கிணைப்புக் குழு (AICCCR) இன் மைய வெளியீடாகவும் பின்னர் அது கலைக்கப்பட்டு இ.பொ.க (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) கட்சி தொடங்கிய பிறகு அதன் மைய வெளியீடாகவும் வெளிவந்தது 'லிபரேஷன்' ஆங்கில ஏடு. அதில் வெளியிடப்பட்ட பல கட்டுரைகளும், ஆவணங்களும் இத்தொகுப்பில் ஒன்றாக வெளியிடப்பட்டுள்ளன.

தொகுப்பு நூலை உருவாக்கியதில் முக்கியப் பங்கு வகிப்பவர் தோழர் சுனிதி குமார் கோஷ். ஒருங்கிணைப்புக் குழுவிலும், பின் நக்சல்பாரி கட்சியின் மையக் குழுவிலும் உறுப்பினராக அங்கம் வகித்தவர் இவர்.

வெளியீட்டின் முதல் தொகுதி: ரூ.100/- (அஞ்சல் செலவு ரூ.15/- தனி)

அடுத்த தொகுதி: அச்சில் உள்ளது. தேவைப்படுவோர் 'ஆர்.சீனிவாசன்' என்ற பெயருக்கு பணவிடை (DD) எடுத்து அனுப்பவும். முகவரி: ஆர்.சீனிவாசன், 45.செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை - 600 049.

○ ○ ○

## ''பட்டினி இந்தியாவில் பாபர் மசூதியும் இராமர் கோவிலும்''

☆ ராமஜென்மபூமியல்ல, பாபர் மசூதியே என்பதற்கு வரலாற்று ஆதாரங்களுடன் விளக்கம் கூறும் நூல் வெளிவந்துள்ளது. பார்ப்பனீய, இந்து மதவெறி ஆர்.எஸ்.எஸ். முகத்திரை கிழித்து அம்பலப்படுத்தும் ஏராளமான விவரங்கள் உள்ளன.

☆ **நூலாசிரியர்: பேராசிரியர் கார்த்தி ● விலை ரூ.28 ● நூல் கிடைக்குமிடம்: சித்தார்த்தா வெளியீடு, 11, பாட்ராச்சாரியார் தெரு, கும்பகோணம் - 612 001.**

○ ○ ○

## சநாதன தருமத்தை வெட்டுவோம்!

'துரோணர் செய்தது சரியா?'-


'ஆன்மீகம்' என்ற தலைப்பில் தினமணியில் ஒரு செய்தி வந்துள்ளது. சென்னை மேற்கு மாம்பலம் ஓரியண்டல் பள்ளிக்கூடத்தில் ஒரு பார்ப்பான் பேசியிருக்கிறார். பேச்சின் சாரம் இதுதான்: துரோணர் ஏகலைவன் கட்டைவிரலை வெட்டியது தவறென்கிறார்கள். துரோணர் ஏன் கேட்டார்? ஏகலைவன் ஒருவேடன். அவனுக்கு வில்வித்தை தெரிந்திருந்தாலும், ஒரு நாயைக் கொல்ல ஏழு, எட்டு அம்புகளைப் பயன்படுத்தியிருக்கிறான். விலங்குகளை இப்படிக் கொடூரமாகக் கொல்பவன் காட்டில் உள்ள எல்லா விலங்குகளையும் அல்லவா அழித்துவிடுவான்? இது ஒன்று; மற்றது, ஒரு வேடனுக்கு அவன் தொழிலுக்குத் தேவையான அளவு வித்தை தெரிந்தால் போதும்; ராஜவித்தை அளவு அவனுக்கு தெரியவேண்டாம். அவனவனுக்குத் தேவையான அளவு தெரிந்திருப்பதே போதும். மேலே தெரிந்தால் அது ஆபத்தானது. இந்த இரண்டு காரணங்களாலும்தான் துரோணர் குரு தட்சணையாகக் கட்டைவிரல் கேட்டார்.

வேடன் தொழில் விலங்குகளைக் கொல்வ தென்றாலும் சிறிது சேமித்தாலும் எல்லா விலங்குகளையும் ஒரேயடியாகக் கொன்று சேமித்து வைப்பதில்லை; அவன் வெறியன் அல்ல; பல விலங்குகள் வளர்பதும், வாழ்வதும் அவன் இயற்கை நியதி என்று எண்ணுவதில்லை. வேட்டையில் இயல்பான அநுபவரீதியான தராதரங்களை அவன் மற்றவிலங்குகளிடமிருந்தே ஒப்பிட்டுக் கற்கிறான். ராஜாதான் பொருளோ, குறியோ, இலக்கோ, காரணமோ இல்லாமல் உல்லாசத்துக்காக வேட்டையாடுவான். எனவே ஏகலைவன் பற்றிய துரோணர் கருத்தாக இந்த (அதிகப்) பிரசங்கி சொல்வது விபரீதமான, கலப்படமற்ற கற்பனை. சரியாகச் சொன்னால், தனது மாணாக்கரைக் காட்டிலும் சிறந்த வில்வித்தைக்காரன் வந்துவிடக் கூடாதென்பதற்காகவே துரோணன் அப்படிச் செய்தான்.

இன்னொன்று: குலத்தொழில் பற்றிய சநாதன தருமம், வேடனுக்கு அதிக கல்வி இருக்கக்கூடாது என்பது திமிர் பிடித்த வாதம். இது வருண தருமத்தை இன்றும் நியாயப்படுத்தும் திமிர். இந்தப் பேதமெல்லாம், அந்தக் காலத்தில் தடை என்று சொல்லிக் கொண்டே இன்றும் நியாயப்படுத்துவது பார்ப்பனத் திமிர்; அதை எடுத்து பத்திரிக்கையில் மறுபிரசுரம் செய்வதற்கு இன்னும் எவ்வளவு திமிர் இருக்கவேண்டும்?

படிப்பகம்

www.padippakam.com




# பார்ப்பன ஏடுகளின் பச்சோந்தித்தனம்

பொம்மை ஆட்சிகளை உருவாக்கவும், காக்கவும் அவை செல்வாக்கிழக்கும்போது அவற்றை வீழ்த்திவிட்டு இன்னொரு பொம்மையை ஆட்சியிலமர்த்தவும் சி.ஐ.ஏ உலகின் பல நாடுகளில் செய்துள்ள சித்துவேலைகள் சற்று காலம் தாழ்த்தியாவது அம்பலமாகியுள்ளன. அதேபோல் அமெரிக்க எதிர்ப்பு அலை எங்கெல்லாம் ஓங்குகிறதோ அங்கெல்லாம் எதிர்ப்புப் போராட்டத்தின் தலைமையைக் கைப்பற்றி அதன் மூலம் எதிர்ப்பை கட்டுக்குள் வைக்கவும், திசை திருப்பவும், சிதறடிக்கவும் சி.ஐ.ஏ. நடத்திய சதிகளும் வெளியாகியுள்ளன.

தகவல் தொடர்பு சாதனங்களை, அதாவது சமுதாயத்தின் சிந்தனையையே தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு 'அதோ நிலா பார்' 'ரயில் பார்' 'பூனை பார்' என்று அழுகின்ற குழந்தையின் கவனத்தைத் திசைதிருப்பும் தாயைப் போல், தேர்ச்சி நயமிக்க முறையில் - ஆனால் வஞ்சகமாக - திசைதிருப்பும் இந்தக் கலையை சி.ஐ.ஏ யாரிடமிருந்து கற்றிருக்கக் கூடும்? சந்தேகமென்ன, இந்தியப் பார்ப்பன கூட்டத்திடமிருந்துதான் - அதிலும் குறிப்பாகத் தமிழகப் பார்ப்பனர்களிடமிருந்து. இந்தத் துறையில் 3000 ஆண்டு பாரம்பரியமும், அனுபவ அறிவும் கொண்ட பார்ப்பனக் கும்பல் இந்த விசயத்தில் தங்களது அறிவு வளத்திற்காக (Intellectual property) சி.ஐ.ஏவிடம் ராயல்டி கேட்டுப் பெறுமளவு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இன்று கண்முன்னே அவர்கள் நடத்திக் காட்டும் கண் கட்டு வித்தையே இதற்கு சிறந்த சான்று.

தி.மு.க. ஆட்சியைக் கவிழ்த்து ஜெயலலிதா ஆட்சிக்கு வர வழிவகுத்த சுப்பிரமணியசாமி, இன்று ஏன் ஜெயலலிதாவை வரிந்து கட்டிக் கொண்டு எதிர்க்கிறார்? நடப்பது பார்ப்பனக் கும்பலின் ஆட்சியென்றால் இன்னொரு பார்ப்பனரே அதை எதிர்த்து போர்க் கொடி தூக்க வேண்டிய அவசியம் என்ன?

ஜெயலலிதா ஆட்சியில் ஊழலும் அதிகார முறைகேடுகளும் அதிகமாகிவிட்ட காரணத்தினால் அதனை எதிர்த்துப் போராடுவதன் மூலம் தனது ஜனநாயகக் கடமையை ஆற்றுவதாக சுப்பிரமணியம்சாமி கூறுவதை நம்புவதற்கு நிச்சயமாக ஒரு அடிமுட்டாள்கூடத் தயாராக இல்லை. அந்த அளவுக்கு சுப்பிரமணியசாமியின் யோக்கியதை மிகவும் பிரசித்தம். பிறகு வேறென்னதான் காரணம்? என்ன காரணம். என்ன காரணம் என்ற கேள்வி வேதாளம் விக்கிரமாதித்தனுக்குப் போட்ட புதிரைப் போல் எல்லோருடைய மண்டையையும் குடைகிறது. இந்தக் கேள்வியை மண்டையில் சுமந்த விக்கிரமாதித்தனாக நாம் வேதாளத்தைத் தோளில் சுமந்து அலைகிறோம்.

இந்தப் புதிருக்கு விடை கிடைக்குமா? நிச்சயம் கிடைக்காது. 'ஜெ'வுக்கும் சுப்பிரமணியசாமிக்கும் எந்த ரகசிய பேரத்தில் முரண்பாடு வந்தது என்று யாருக்குத் தெரியும்? கொள்ளைக் கூட்டத்திற்குள் பங்கு பிரிப்பதில் நடக்கும் தகராறு ஒரு கொலை விழுந்தபிறகுதான் வெளியே வரும்; அதன் பிறகும் வெளிவராமலே கூடப் போகலாம். இந்த உபயோகமற்ற சிந்தனையில் நம்மை மூழ்கடித்ததில் வெற்றி பெற்ற வேதாளங்கள்தான் பார்ப்பன பத்திரிகைகள்.

இனி தூக்கி நிறுத்துவது சாத்தியம் இல்லை என்கிற அளவுக்கு ஜெயா கும்பல் ஒன்றரை ஆண்டு காலத்திற்குள்ளாகவே அம்பலப்பட்டுப் போய்விட்டது. சவப்பெட்டியின் இறுதி அணியாக வந்தது கருணாநிதி கொடுத்த ஊழல் புகார் பட்டியல். இனி என்ன செய்வது? ஜெயலலிதாவை நேரடியாக இனி ஆதரித்தால் மக்களிடமிருந்து தனிமைப்படுவது மட்டுமல்ல, பார்ப்பனக் கும்பல் என்பது சரிதான் என்று இதுவரை நம்ப மறுத்தவர்களும் கூட நம்பத் தொடங்கிவிடுவர்; அதன் அரசியல் விளைவு தி.மு.க.வுக்கு சாதகமாகவே முடியும். மீண்டும் தி.மு.க. ஆட்சியா? சர்வமானியமாகக் கிடைத்த தமிழகத்தை இழப்பதா? தான் கற்ற வித்தைகள் அனைத்துடனும் களத்தில் இறங்கிவிட்டது பார்ப்பனக் கும்பல்.

நடுநிலை நாளேடுகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் தினமணி, எக்ஸ்பிரஸ், இந்து, ஆனந்த விகடன், கல்கி, துக்ளக் வகையறாக்கள் (பார்ப்பனக் கும்பலின் கள்ளங்கபடமற்ற பிள்ளையான தினமலரை இதில் சேர்க்க வில்லை) கடந்த இரண்டு மாதங்களாக நடத்திவரும் 'நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட திற

படிப்பகம்

www.padippakam.com

மையான' பிரச்சாரத்தைக் கவனித்தீர் களானால் சி.ஐ.ஏ.வின் குருநாதர்கள் இவர்கள்தான் என்பதை தயக்க மின்றி ஏற்றுக்கொள்வீர்கள்.

### கருணாநிதிக்கு இருட்டடிப்பு சப்பிரமணியசாமிக்கு விளம்பரம்

கருணாநிதி கவர்னரிடம் ஊழல் புகார்ப் பட்டியல் கொடுத்த சில நாட்களிலேயே திடீரென்று அர சியல் களத்தில் குதித்தார் சப்பிரம ணியசாமி. தி.மு.க.வின் குற்றச்சாட் டுகளுடன் ஒப்பிடுகையில் குறை வான, சாதாரணமான குற்றச்சாட்டு களை 'ஜெ' ஆட்சிக்கு எதிராக முன் வைத்த சாமிக்கு கருணாநிதியைக் காட்டிலும் பன்மடங்கு விளம்பரம். ஆனந்த விகடனில் அட்டைப் படக் கட்டுரை; துக்ளக்கில் பேட்டி. தினச ரிகள் அனைத்திலும் முதல் பக்க முக் கியத்துவம். தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க.விற்கு அல்ல; அநாமதேயமான சுப்பிரம ணியசாமிக்குத்தான்.

எப்படி இருந்தாலும் இது 'ஜெ வுக்கு பாதகமானதுதானே என்று கரு தலாம். உண்மைதான், எனினும் அது தாற்காலிக பாதிப்பு மட்டுமே. கருணாநிதியை இருட்டடிப்பு செய் வதன் மூலம் தி.மு.க.வை செயலற்ற தாக் காட்டலாம். ஊழல் புகார்க ளால் 'ஜெ' வுக்கு எதிராக எழும் கருத்தை - ஓட்டுக்களை தி.மு.க.வுக் குப் போகவிடாமல் தடுக்கலாம். பின்னால் பொருத்தமானதொரு சந் தர்ப்பத்தில் சாமியை 'சந்தேகத்துக்கி டமான பேர்வழி' என்று கூறி அவ ரது புகார்களையும் குப்பையில் வீசி விடலாம். அனைத்துக்கும் மேலாக பார்ப்பன ஆதரவு உணர்வு தங்க ளுக்கு இல்லை என்று காட்டிக் கொள்ளலாம்.

### 'ஊழலா இல்லையா' என்ற கேள்வியை 'கவர்னர் அனுமதிப்பாரா' என்று மாற்றுவது

ஊழல் குற்றச்சாட்டுப் பட்டிய லைக் கொடுத்து வழக்கு தொடர கவர்னரிடம் அனுமதி கேட்டார் கரு ணாநிதி. படுக்கையறைகளையும், கழிப்பறைகளையும் கூட வேவு பார்க்கும் ஆந்தைகளும், கழுகுக ளும், ஐரோப்பாவுக்கே போய் புல னாய்வு நடத்தும் இந்து, எக்ஸ்பிரஸ் ஏடுகளும் இந்தப் புகார்களில் உண்மை உள்ளதா என்று புலனாய்வு செய்தார்களா? அதுதான் இல்லை, சொல்லி வைத்தாற்போல் எல்லா பத்திரிகைகளும் ''கவர்னர் அனும திக்க மாட்டார் ஜெ ஆதரவு தேவை என்பதால் நரசிம்மராவ் கண்டு கொள்ளமாட்டார்'' என்று ஆருடம் சொல்லத் துவங்கின. முதல்வர்மீது வழக்கு தொடர கவர்னர் அனுமதி தேவை என்ற ஜனநாயக விரோத சட் டத்தை எதிர்ப்பது இருக்கட்டும்; உண்மையா பொய்யா என்பதை நீதி மன்றம் முடிவு செய்வதற்குத் தடை யாக கவர்னரும், பிரதமரும் இருப் பதை இந்த 'ஜனநாயக விரும்பிகள்' யாரும் வாயளவிற்குகூடக் கண்டிக்க வில்லை. ஊழல் நடந்ததா, இல் லையா என்ற மையமான கேள்வி கவர்னர், பிரதமர் மேற்கொள்ளவி ருக்கும் முடிவுகள் குறித்த கிசுகிசு செய்தியாக மாற்றப்பட்டது.

### பங்காரப்பாவுக்கும் ஜனார்த்தன ரெட்டிக்கும் தலைப்பு செய்தி ஜெயலலிதாவுக்கு?

சென்ற இருமாதங்களில் ஆந்தி ராவிலும், கர்நாடகத்திலும் காங்கி ரஸ் முதல்வர்களுக்குத் தோன்றிய நெருக்கடி 'தமிழக பார்ப்பன ஏடுக ளுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. அன்றாடம் தலைப்புச் செய்தியும், முதல்பக்க செய்தியும், இவர்களைப் பற்றித்தான். நரசிம்மராவ் முதல்வர் களை மாற்றுவதில் செய்யும் தாம தத்தை தலையங்கம் எழுதிக் கண்டித் தது தினமணி, ''ஊழல் குற்றச்சாட்டு உள்ளவர்கள் பதவியில் இருக்கக்கூ டாது'' என்ற நரசிம்மராவின் கொள் கையையும் ரெட்டியின் மாற்றத்தை யும் பலமாக வரவேற்ற கல்கி பங்கா ரப்பாவையும் உடனே நீக்குமாறு தலையங்கம் எழுதியது. ஆனால் ஜெ மீதான தி.மு.க.வின் ஊழல் புகார் பற்றி தவறிக்கூட யாரும் தலையங் கம் எழுதவில்லை. மாறாக செய்தி விமர்சனம் எழுதிய தினமணி ஆசிரி யர் கஸ்தூரி ரங்கன் கருணாநிதியின் புகார் அடுத்த தேர்தலில் அவருக்கு உதவலாமே தவிர தற்போது வேறு எதற்கும் பயன்படாது என்று திரு வாய் மலர்ந்தார்.










படிப்பகம்

www.padippakam.com




பங்காரப்பாவிற்கும், ரெட்டிக்கும் தரப்பட்ட இந்த 'விளம்பரத்தின்'' நோக்கம் என்ன? ஒன்று 'ஜெ' விவகாரத்தை இருட்டடிப்பு செய்ய; இரண்டாவது அவர்களுடன் ஒப்பிடும்போது தமிழ்நாடு பரவாயில்லை என்ற கருத்தை உருவாக்க. இந்தக் கேள்வியை கருணாநிதி கேட்டபோது அதையும் சேர்த்து இருட்டடிப்பு செய்துவிட்டனர்.

**எல்லோரும் திருடர்களே**
**உலகம் முழுவதும் ஊழலே**

இத்தனை இருட்டடிப்புகளுக்குப் பிறகும் சோ சமாதானமடையவில்லை. பிலிப்பைன்சில் நடந்த ஊழலைப் பற்றி ஒரு கட்டுரை வெளியிட்டு பிலிப்பைன்சுக்கு நம் நாடு எவ்வளவோ தேவலாம் என்று ஆறுதல் சொன்னார். இந்தியாவின் விசாரணைக் கமிஷன்களின் வரலாறை எழுதி இதெல்லாம் மோசடிகள் என்றும் எந்த காலத்திலும் யாரும் தண்டிக்கப்பட்டதில்லை என்றும் 'அம்பலப்படுத்தினார்'. இதெல்லாம் எதற்காக? இந்த அமைப்பு முறையே மோசம் என்று இப்போது ஞானோதயம் பிறந்தது ஏன்? 'எல்லாம் அப்படித்தானப்பா' என்ற சலிப்பையும் விரக்தியையும் வாசகனுக்கு உருவாக்கி அதன்மூலம் தற்போதைய குறிப்பான பிரச்சினையின் மீது - ஜெயின் ஊழல் மீது மக்களின் கோபம் குவியாமல் சிதறடிக்க. மண்டல் கமிஷன் பிரச்சினையின் போது 'உழுபவனுக்கு நிலம் சொந்தம்' என்று ஒரு நாள்விட்டு ஒரு நாள் கோயங்காவின் பத்திரிக்கை அவேசமாக முழங்கவில்லையா? அதுபோலத்தான்.

**ஒரே குட்டையில் ஊறிய**
**மட்டைகளும்**
**ஊறாத மட்டையும்**

எல்லாவற்றையும் தாண்டி கருணாநிதிக்கு ஆதரவு வந்துவிட்டால் என்ன செய்வது என்ற கவலை தினமணிக்கு. மாபெரும் 'தேசியமணி' அடுத்த கணமே 'பிராந்தியமணி' யாக அவதாரம் எடுத்தது. மூப்பனார் தமிழக அளவில் பிராந்தியக் கட்சி தொடங்கி ஒரு நம்பிக்கையான மாற்றாக வளரவேண்டும் என்று தலையங்கம் எழுதியது; குமரி அனந்தன் என்னும் பச்சோந்தியின் பாதயாத்திரையைப் பாராட்டி இன்னொரு தலையங்கம். துக்ளக்கில் மூப்பனார் பேட்டி; ''குட்டை - மட்டை'' அட்டைப்படம்.

'ஜெ' வின் மீது தற்போதுள்ள குற்றச்சாட்டுகள் பற்றி பேசுவதை விட்டு, கருணாநிதியும் ஜெயலலிதாவும் பரஸ்பரம் சேற்றைவாரி இறைத்துக் கொள்வதாகவும், இவர்களுக்கு அப்பாற்பட்ட புனிதனாக காங்கிரசு நிற்பதாகவும் சித்தரித்தது துக்ளக். இந்த மட்டைகளில் ஒன்றைத்தான் சென்ற தேர்தலில் தாங்கள் ஏகமனதாக ஆதரித்தோம் என்பதை வசதியாக மறைத்துவிட்டு தைரியமாக எழுத வேறுயாரால் முடியும்?

கைதேர்ந்த முறையில் நடத்தப்படும் இந்த கூட்டிசையினூடே பிசிறு அடிப்பது போல இவர்களது உண்மை உருவமும் வெளிப்படாமல் இல்லை. 'ஜெயா பப்ளிகேஷன்ஸ்'க்கு அரசு ஆர்டர் கொடுக்கப்பட்டிருந்தால் - அது சட்டப்படி குற்றம் என்றும், ஜெயாவின் எம்.எல்.ஏ. பதவிக்கு ஆபத்து என்றும் சொல்கிறது துக்ளக். கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உலகறிந்த விசயமாயிற்றே. முக்காலமும் உணர்ந்த இந்த அரசியல் ஞானிக்கு இது தெரியவில்லை போலும்!

ஒரு அதிகார பூர்வமற்ற கமிட்டி அமைத்து இதை விசாரிக்கலாம் என்று புதுயோசனை கூறுகிறது கல்கி. மீறிக்கலைத்தால் அனுதாப அலையில் ''ஜெ'' மீண்டும் வந்துவிடுவார் என்று எச்சரிக்கிறது. 'ஜெ' தானே ராஜினாமா செய்தால் உண்டு வேறு ஒன்றும் செய்வதற்கில்லை என்று தைரியம் சொல்கிறார் சட்ட வல்லுனர் சோ. ''சுப்பிரமணியசாமியின் புகாரே எடுபடாத போது கருணாநிதியின் புகார் எப்படி எடுபடும்?'' என்று கொக்கரிக்கிறது தினமணி - சுப்பிரமணியசாமி ஏதோ பத்தரை மாற்றுத் தங்கம் போல! ''ஜெயலலிதாவைவிட மோசமானவர் கருணாநிதி மட்டுமே'' என்று அந்த பத்தரை மாற்றுத் தங்கம் சான்றிதழ் தருகிறது. ஊழலில் கருணாநிதிதான் குரு, ஜெயலலிதா அவரது மாணாக்கர் என்கிறார் சோ.

இனிவரும் நாட்களில் புதிய புதிய கோணங்களில் விளக்கங்கள் வரும். ஆனால் எந்தக் கோணத்திலிருந்து எழுதினாலும் அது 'ஜெ' ஆட்சியை வீழ்த்துவதாகவோ, கருணாநிதியின் குற்றச்சாட்டுகளை பரிசீலிப்பதாகவோ மட்டும் இருக்காது. இந்தப் பார்ப்பனக் கும்பலின் திருவிளையாடல்களை அம்பலப்படுத்துவதன் நோக்கம் தி.மு.க.விற்கு ஆதரவு தெரிவிப்பது அல்ல. மாறாக, பேச்சளவிற்கு மேல் பார்ப்பனக் கும்பலுக்கு எந்தத் தொல்லையும் கொடுக்காத தி.மு.க.வைக்கூட சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு இவர்களிடம் சாதிவெறி தாண்டவமாடுவதை எடுத்துக்காட்டத்தான். நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கும்பிட்டாலும் சரி, 'அவாள்' நம்மை ஆதரிக்கப்போவதில்லை என்பதை தி.மு.க. தொண்டர்கள் உணர்ந்தால் சரி.

**○ சூரியன்**

படிப்பகம்

www.padippakam.com

# நிழலின் நிறம்



இன்னும் கொஞ்ச நேரத்தில் தொடங்கப் போகிற 'ஒளியும் ஒலியும்' பார்க்க சமையலை அவசரம் அவசரமாய் முடித்து விட்டு தொலைக் காட்சிப் பெட்டி இருக்கிற வீட்டுக்கு ஒருவிதக் கூச்சத்துடனும் அதை மீறுகிற ஆவலுடனும் பெண்கள் செல்லுவதும். வீட்டுக்குள் ஒரு மூலையை அடைந்த பின்பே வந்திருப்பவர்களை சுற்றிப் பார்ப்பதும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை முன்னிரவிலும் வழக்கமான காட்சிகள். இவர்களுக்கும் முன்பே தொலைக் காட்சிப் பெட்டியின் முன்பு நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்து இருக்கும் சிறுவர். சிறுமியர். முகத்தின் அருகே இவர்கள் நேரில் கண்டிராத. ஒருபோதும் காணவே முடியாத ஒரு வாழ்வின் நிழல். தம்மைப் பற்றிய புரிதல் வரும் முன்பே தங்களைப் போன்ற சிறுவர். சிறுமியர் வாழும் வேறு ஒரு வாழ்வின் மீது எழுகிற ஏக்கமிகு ஈர்ப்பு! குறிப்பாக விளம்பரங்கள் காட்டுகிற உலகின் கவர்ச்சி இவர்கள் மீது எப்படிப்பட்ட பாதிப்புகளையெல்லாம் ஏற்படுத்துகிறது!

தொலைக் காட்சிப் பெட்டி நடுத்தரக் குடும்பங்களின் வீடுகளில் எவ்வளவோ காரணங்களின் பேரில் இடம் பெறுகிறது. வெளியுலகைப் பற்றிக் குழந்தைகள் தெரிந்து கொள்ள வாங்குவதாகவும், விளையாட்டுகள் தேசிய நிகழ்ச்சிகள் பற்றித் தெரிந்துக் கொள்ள வாங்குவதாகவும், பொழுதுபோக்குக்கு வாங்குவதாவும், கூறிக் கொண்டு தொலைக் காட்சிப் பெட்டி இல்லாத வீட்டையே கேவலமாக எண்ணுகிற அளவுக்கு இன்று நடைமுறை இருக்கிறது. அதன் தாக்கம் எல்லா வயதினர் மீதும் வேறுவேறு அளவுகளில் வெளிப்படுகிற போதும், குறிப்பாக விளம்பரங்கள் சிறுவர், சிறுமியர் மனத்தில் எவ்வகைத் தாக்கத்தை விளைவிக்கின்றன என்பதைப் பற்றி பார்ப்போம்.

வாழ்க்கையில் கற்றல் வேக அளவு (Rate of Learning) முதல் 5 ஆண்டுகளில் தான் மிக மிக அதிகம். இந்த வயதில்தான் அடிப்படையான மன வளர்ச்சியை நாம் பெறுகிறோம். வாழ்வின் விழுமியங்களைப் (Values of Life) பற்றிய புரிதல் இவ்வயதில் தான் கிட்டுகிறது. செய்திகளை மனக் கண்ணில் பார்ப்பது, கற்பனைத் திறன், துண்டு துண்டு செய்திகளை இணைத்துப் புதிதாய் உருவாக்குவது போன்ற பல்வேறு மனவியற் பணிகளை செய்து பழகுதல் இக் காலப் பகுதியில் தான். குறிப்பாக மனதில் விஷயங்களை உள்வாங்கும் திறன் தானறிந்த உலகின் பொருட்களாய் கேட்பவற்றை மனத்திரையில் வடிவமளித்தல் (Visualisation) என்றவாறு மன வளர்ச்சியின் மிக முக்கிய ஆரம்பக் கட்டம் இது. இதில் ஏற்படும் தாக்கங்கள் அவற்றின் அளவு, தன்மைக்கேற்ப தனி நபரின் பண்பியல் தொகுப்பின் (Individual's Personality) உருவாக்கத்தில் பங்கேற்கின்றன.

விளம்பரங்களில் வரும் பிள்ளைகள் முழுக்க முழுக்க மேட்டுக் குடியினரின் பிள்ளைகள், அதிலும் குறிப்பாய் உயர்மேட்டுக் குடியனரின் பிள்ளைகள். கொழு கொழுவென்று பொம்மைகள் போல தமிழையே வேறு ஒரு விதத்தில் பேசிக் கொண்டு: இவை வேறு ஒரு வாழ்க்கை முறையின் குறியீடுகளாய் நிற்கின்றன. 'ஜான்சன்' அண்ட் ஜான்சன்' குழந்தைப் பொருட்களில் வளர்ந்து. 'காம்ப்ளான்' சாப்பிட்டு 'ரஸ்னாவை'க் காதலித்து. அப்பாவின் 'பஜாஜ்' ஸ்கூட்டரில் தொற்றிக் கொண்டு அவை வெளிப்படுத்தும் செய்திகள் வெறும் பொருள் விளம்பரம் என்ற மட்டத்தில் மட்டும் நிற்பன அல்ல. ஒவ்வொரு விளம்பரத்தின் காட்சி அமைப்பிலும் வருகிற பிற விஷயங்களுடன் இணைத்துக் காணப்பட வேண்டியவை.

எடுத்துக்காட்டாக, பற்பசை விளம்பரம் ஒன்றில் தனது அறையில் மேசை விளக்கு பொருத்தப்பட்டுத் தனிமேசை, நாற்காலி புத்தக அடுக்குடன் வண்ணப் புத்தகங்கள், சுவரொட்டிகள் உள்ள அறையில் படிக்கிற ரவி நாலு பெரிய சாக்லேட்டுகளை அவசர அவசரமாகத் தின்னுகிறான். அவனது அம்மா பின்னாலிருந்து வந்து செல்லமான கண்டிப்புடன் அவற்றைப் பிடுங்கிக் கொண்டு பல் விளக்கக் கோருகிறாள். இவ்வகையில் அப்படிச் சாக்லேட்டுகளை சாப்பிட்டாலும் கூட பற்பசையால் பாதுகாப்பு உண்டு என்கிறார்கள். விஷயம் சிறுகுழந்தைகள் மனதில் இது பற்பசையை பயன்படுத்துகிற செய்தியாகப் படிவதில்லை என்பதில் தான். தனது வீட்டில் அத்தகைய அறையின்மையை, 10 காசு மிட்டாய்க்குத் தான் கெஞ்ச வேண்டியிருப்பதை, தன் அம்மா ரவியின் அம்மாவைப் போல் இல்லாததை, இன்னும் பெரிய சாக்லேட் ஒன்று கூட தான் தின்றிராததை எல்லாம் அக்குழந்தை மனத்தில் வாங்குகிறது. தனது வாழ்வின் மீது அதற்குப் பற்றுக் குறைகிறது. தனது பெற்றோரின் இயலாமையை எண்ணி மனம் வெதும்புகிறது. தான் பெற முடியாத அவ்வாழ்வின் சுகங்களை எண்ணிக் குமைந்து அதன் மீது ஏக்கம் கொள்கிறது. அதன் வாழ்வின் ஒரு தணியாத வேட்கையாக இவர்கள் காட்டும் இன்பங்களை அடைதலை அது கொண்டிருக்கும். அதாவது அதன் வாழ்வின் மொத்தத் திசைவழியும் (Orientation) இதை நோக்கியதாக ஆழ் மனதில் படிந்து விடுகிறது.

'காம்ப்ளான்' விளம்பரத்தில் தேர்வுக்குத் தயாரித்து கொண்டிருக்கும் சிறுமியிடம் அவளது அம்மா பின்னாலிருந்து வந்து ஒரு கண்ணாடித் தம்ளரில் 'காம்ப்ளான்' வைத்து விட்டுச் செல்கிறாள். திரும்பிச் செல்கிற அம்மாவின் கையைப் பிடித்திழுத்து முத்தமிட்டு நன்றியுரைக்கிறாள் அப்பெண். ஒண்டுக் குடித்தனங்களில் இரைச்ச





படிப்பகம்

www.padippakam.com



லும் சந்தடியுமிக்க சூழலிலேயே படிக்க வேண்டி இருக்கிற ஒரு நகர்ப்புற தொழிலாளியின் குழந்தைக்கு தனக்கு இத்தகைய அறையோ தான் படிக்கிற போது 'காம்பளான்' தருகிற அம்மாவோ இல்லை என்பது காயமாய்ப் படியும். 'நியுட்ரமூல்' பிள்ளைகளை எடுத்துக் கொண்டால் அண்ணனும் தங்கையும் பெரிய கட்டில் இருக்கிற தனது அறையில் புரட்டிக் கொண்டிருக்கிற ஆங்கில காமிக்ஸ் புத்தகத்தில் இருந்து உயிர் பெற்றெழும் 'கறுப்பு பூதத்தை' விரட்ட 'நியுட்ரமூல்' சக்தி துணை வருகிறது. காப்பித் தண்ணி அல்லது கடைத் தேநீரைப் பகிர்ந்து குடிக்க வேண்டிய நிலையில் உள்ள குடும்பத்தின் குழந்தைக்கு இது புதிதாய் இருக்கிறது. இத்தகைய சக்தி மிகு 'நியுட்ரமூல்' தனக்கு ஏன் கிடைக்கவில்லை என்று இது இயல்பாகவே எண்ணுகிறது. 'ஹார்லிக்ஸ்' சிறுவன் பச்சைக் குதிரை விளையாடும் புல் தரை கொண்ட வீடோ அல்லது பற்பசை விளம்பரங்களில் வரும் அம்மா, அப்பா, குழந்தைகள் பல்விளக்கும் பெரிய குளியலறையோ லீசான்சி சோப்புக் குழந்தைகள் குளிக்கும் பெருங் குளியற்தொட்டிகளோ கனவுகளாகவே நீடிக்கின்றன.

பள்ளியிலிருந்து திரும்பிய உடன் வீட்டு வேலை செய்யவோ, தண்ணீர் இறைத்து ஊற்றவோ, கடைக்கு போகவோ சொல்லும் பெற்றோரை மட்டுமே அறிந்திருக்கும் புழுதியின் குழந்தைகளுக்கு வீடு திரும்பிய பிள்ளைகளுக்கு "இரண்டு நிமிட நூடில்ஸ்" பரிமாறும் அம்மாவைக் காணும் போது தன் அம்மாவுடன் ஒப்பிட்டு அவள் மீது வெறுப்புத் தோன்றுகிறது. பள்ளிக்கூடத்துக்கு போட்டுச் செல்ல புதிய சட்டை மாதக் கணக்கில் கேட்டு முரண்டு பிடித்தும் தீபாவளியைப் பொங்கலைக் காரணம் காட்டிக் கிழிந்த சட்டையை தைத்த சட்டையைப் போட்டுச் செல்ல வற்புறுத்தும் பெற்றோரின் பிள்ளைகளுக்கு நிழல் குழந்தைகளின் விதம் விதமான ஆடை அணிகள் வியப்பூட்டுகின்றன. அவர்களைப் போல வாழ ஏக்கம் தோன்றுகிறது.

ஒரு வளர்ச்சியடைந்த மனிதனின் கண்களை விடவும் ஒரு வளரும் குழந்தையின் கண்களும் மனமும் கூடுதலாகக் காண்கின்றன. கூடுதலாக உள்வாங்கிக் கொள்கின்றன. 'ரஸ்னா' விளம்பரக் குழந்தை "ஐ லவ் யூ ரஸ்னா" என்று முகத்தோடு அணைத்துக் கொள்ளும் பெருங்கண்ணாடி குவளை ஒன்று கூட இல்லாததை நினைவு கொள்கிறது அதை வாங்கி வைத்திராத தனது பெற்றோரைக் குறைவாக எண்ணுகிறது. தன்னைப் பற்றியும் அதற்கு தாழ்வெண்ணக் குறைபாடு (Inferiority Complex) தோன்றுகிறது. ரொட்டி, மிட்டாய், ஐஸ்கிரீம் விளம்பரங்கள் அறிமுகப்படுத்தும் வகைகள் ஒன்றைக் கூட இன்னும் தான் சுவைத்திராததை எண்ணி அது உளவெறுமை கொள்கிறது. ஒரு புறம் இனிமையும் சுவையும் பொருந்திய ஒரு வாழ்விருப்பதையும் அதில் தான் பங்குபெறவே முடியாதிருப்பதையும் அது நேரடியாக தனது பெற்றோர் தன்னைக் கவனியாதிருப்பதாக அது ஒப்புமைப் படுத்திக் காண்கிறது. அவர்களை தன்னையறியாது வெறுக்கவும் தீழாக எண்ணவும் தலைப்படுகிறது.

அதாவது நம் குழந்தை முற்றிலும் தன் வாழ்வைப் பற்றி மெய்யான புரிதலற்று, எக்காலத்திலும் தான் பெறமுடியாத மேட்டுக்குடி வாழ்வை வெறுப்பதற்கு பதிலாக அதை மட்டுமே உண்மையானதாக, வாழ்வில் அடையப்பட வேண்டிய இலக்காக எண்ணி மயக்கத்தில் வளர்கிறது; உழைப்பவனை, அவர்களது வாழ்க்கையை கீழ்த்தரமானதாக எண்ணப் பழகி விடுகிறது. அதை வெறுத்தொதுக்குகிறது. குடும்ப உறுப்பினர்களை தான் திரையில் கண்ட பிம்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து உள்ளூர அருவெறுக்கிறது. வாழ்வைத் தூய்க்க எண்ணுகிற அதன் உள அழுத்தம் அதற்குக் கிடைக்கும் சாத்தியமான சாதாரண மகிழ்வுகளை வெறுக்கவோ அல்லது சலிப்புடன் ஏற்கவோ வைக்கிறது. அதாவது உப்பிட்ட நாவல் பழங்களைத் தந்தால் அதை 'டோலப்ஸ்' ஐஸ்கிரீமுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறது. நாவல் பழத்தின் சுவை அதற்கு ஒரு போதும் பிடிபடுவதில்லை. மாறாக உண்டிராத 'டோலப்ஸ்' ஐஸ்கிரீமுக்கு அது சமமாகவே முடியாது என்ற கருத்துடனேயே வளர்கிறது.

இவை மிகைப்படுத்தப்பட்ட கூற்றுகளல்ல. உண்மையில் ஆழ்மனத்தில் தாக்கம் விளைவிக்கும் இந்த கனவுலகக் காட்சிகளின் விளைவுகள். உறவு நெருக்கமின்றி அன்னியப்படும் குழந்தைகளை இன்று நடுத்தர வர்க்கத்தில் நிறையவே காணமுடிகிறது. அவற்றின் சிறிய வெளிப்பாடுகளை உற்று நோக்கினால் நாம் இந்தப் போக்குகளை உணர முடியும். வளர்ந்த மனிதர்கள் காணும் அதே விஷயத்தை குழந்தைகள் வேறு விதமாகவும் புதிய கோணங்களிலும் காணுகின்றன. அவற்றின் மனவளம், எல்லாவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கும் அவற்றின் இயல்பு தனது விருப்பங்களை எப்படியாவது நிறைவேற்றிக் கொள்ள முயலும் அதனது தவிப்பு, நிறைவேறாத விருப்பங்களின் மீது அவை கைக் கொள்ளும் அணுகுமுறையோடு இவ்விஷயத்தைப் பார்க்க தொலைக்காட்சி எத்தகைய சீரழிவு என்பது புரியும்.

தரகு முதலாளிகள் தங்கள் பொருட்களை விற்க கையாளும் விளம்பரத் தந்திரங்களில் ஒன்று மேட்டுக் குடியினரே பயன்படுத்துவதை நீங்களும் பயன்படுத்துங்கள் என்பது. இதற்காக அவர்கள் காட்டுகிற உலகும் மேட்டுக்குடி உலகுதான். அதன் உள்ளார்ந்த அழுகல் தன்மை, ஆபாச மக்கள் விரோதத்தன்மை இவற்றைப் பற்றிய சரியான புரிதல் வளர்ந்தோருக்கே முற்றிலும் இருப்பதாகக் கருதமுடியாது. குழந்தைகளுக்கு சரியான வழிகாட்டுதல் அளிக்க அவர்களிடம் இவ்வாழ்க்கை முறையை விளக்குவதாலும் அதன் ஆபாசத் தன்மையை வெறுக்கக் கற்றுக் கொடுப்பதாலுமே முடியும். உழைப்பவர்களின் கலாச்சாரத்தைக் கற்றுக் கொடுப்பது - பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தை கடைப்பிடிப்பது - அதைக் குழந்தைகளையும் கடைப்பிடிக்க வைப்பது. குடும்ப உறவுகளை தோழமையானதாகவும் ஆணாதிக்க, பிற்போக்குத் தன்மையற்றவையாகவும் கட்டியமைப்பது போன்றவை குழந்தை வளர்ப்புக்கு அவசியம். ஆளும் வர்க்கங்கள் கையில் வைத்துள்ள வலிய மக்கள் திரள் சாதனங்கள் மேம்போக்காகக் காணப்படுவதை விட அதிக ஆழத்தில் மாற்றங்களை விளைவிக்கும். அதை எதிர்த்துப் போராடுவதும் போராடக் கற்றுக் கொடுப்பதும் மட்டுமே சரியான பண்பியல் தொகுப்புகளுடைய குழந்தைகளை உருவாக்கும் வழி. அல்லது ஓர் எதிர்காலத் தலைமுறையே சாவியாக, விளைவற்றதாக மாறிப் போகும்.

-சுடரொளி- திருச்சி.

படிப்பகம்

www.padippakam.com



## ஓரங்க நாடகம்

# ராமன் இரட்டைக் கொலை வழக்கு

இராமாயணத்தின் கதாநாயகனான இராமனின் பல்வேறு கிரிமினல் குற்றங்களில் இரண்டை மட்டும் எடுத்துக் கொண்டு இந்த ஓரங்க நாடகம் எழுதப்பட்டுள்ளது. பெரிய புராணத்தில் சுந்தர மூர்த்தி நாயனார் வரலாற்றையே ஒரு கிரிமினல் வழக்கு விசாரணையாக, விரிவாகவும் ஆழமாகவும், புராணப் புளுகுகளையும் தோலுரிக்கும் விதத்தில் எழுதினார் மலேசியப் பெரியார்.

ஆனால், இந்த ஓரங்க நாடகம் மக்கள் மத்தியில் வீதிகளில் நடத்துவதற்காகச் சுருக்கமாக எழுதப்பட்டது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக அன்றைய காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப எழுதப்பட்ட நூலை இன்றைய கிரிமினல் சட்ட பார்வையில் விமர்சிப்பது எப்படி சரியாகும் என 'ஆத்திக அன்பர்கள்' பொருமலாம். அப்படிப்பட்ட பழைய குப்பையையே இன்றைய சமுதாயத்தின் ஒழுக்கத்துக்கு வழிகாட்டி என்றும், அதன் நாயகர்களை புனிதர்கள் என்றும், அந்த ராமனே 'தேசிய நாயகன்' என்றும் பார்ப்பன, மேல்சாதிக் கூட்டம் சித்தரிக்கும்போது அந்த ராமனை ''தேசிய வில்லன்'' என்று நாங்கள் நிரூபிப்பதில் என்ன தவறு? அதுவும் கற்பனையாக அல்ல; பார்ப்பனர்களால் போற்றிப் புகழப்படும் வால்மீகி ராமாயணத்தின் அடிப்படையில்!

*பாத்திரங்கள்:- நீதிபதி, பெஞ்சு கிளார்க், அரசு தரப்பு வழக்குரைஞர், ராமனின் வழக்குரைஞர், டவாலி, ராமன், வசிட்டன், நாச்சிமுத்து (சலவைத் தொழிலாளி), மின்னல் கொடி (சீதையின் சேடிப்பெண்)*

*(நீதிபதி தனது இருக்கையில் வந்து அமர்கிறார். பெஞ்சு கிளார்க் வழக்கு விவரங்களைப் படிக்கிறார்)*

**டவாலி:** கோதண்டராமன் என்கிற ராஜாராமன் என்கிற சீதாராமன் என்கிற அயோத்திராமன் என்கிற ராமன்... ராமன்... ராமன்!

*(ராமன் உள்ளே நுழைந்து கூண்டில் ஏறி நிற்கிறான்)*

**பெஞ்சு கிளார்க்:** உன் பேர் ஏன்னப்பா?

**ராமன்:** என் திருப்பெயர் ராமன்.

**பெ.கி:** அப்ப பாக்கி பேரெல்லாம்...?

**ராமன்:** எல்லாம் நானே

**பெ.கி:** என்னய்யா ஆரம்பத்திலேயே குழப்பமா இருக்குது. உனக்கு மொத்தம் எவ்வளவு பேரு...?

**ராமன்:** ஆயிரம் நாமங்கள்.

**பெ.கி:** (தலையிலடித்துக் கொள்கிறார்) சரி, ராமன்கிறது யாரு... நீதானே?

**ராமன்:** ஆம்.

**பெ.கி:** சரி ஆள விடு.

**அரசு வக்கீல்:** யுவர் ஆனர், குற்றம் சாட்டப்பட்ட ராமன் வில் அம்பு போன்ற பயங்கரமான ஆயுதங்களுடன் கோர்ட்டில் வந்து நிற்கிறார். ஏற்கனவே இவர்மீது இரட்டைக் கொலை வழக்கு இருக்கிறது. இவரை ஆயுதங்களுடன் கோர்ட்டுக்குள் அனுமதிப்பது சட்டத்திற்குப் புறம்பானது.

**ராமனின் வக்கீல்:** அப்ஜெக்ஷன் யுவர் ஆனர். இது என் கட்சிக்காரரின் உரிமையைப் பறிப்பதாகும். மேலும் இது எங்கள் மத உணர்வுகளைப் புண்படுத்துகிறது.

**அ.வ:** கனம் நீதிபதி அவர்களே, இந்த ஆள் ஏற்கனவே இந்த ஆயுதங்களைக் கொண்டு இரண்டு கொலை செஞ்சிட்டான். ஊரெல்லாம் அலம்பல் பண்ணக்கிட்டு திரியிறான். கோர்ட் இதை அனுமதித்தால் நமக்கே ஆபத்து.

**நீதிபதி:** அப்ஜெக்சன் ஓவர்ரூல்ட்.

*(டவாலியிடம் கண்ணைக் காட்டுகிறார் - டவாலி அம்பு வில்லை பிடுங்கப் போகிறார் - ராமன் திமிறுகிறான், நீதிபதி மீது அம்பெய்ய முயலுகிறான் - டவாலி பாய்ந்து சென்று வில்லைப் பிடுங்கி அம்பையும் உருவுகிறார். வில்லை இழந்த ராமன் கூண்டில் துவண்டு சாய்கிறான்)*

**ரா.வ:** யுவர் ஆனர் அந்த வில்லை மட்டுமாவது என் கட்சிக்காரருக்குக் கொடுக்க வேண்டுகிறேன். இல்லையென்றால் அவரால் நிற்கக்கூட முடியாது.

*(வில்லை மட்டும் கொடுக்க நீதிபதி உத்தரவிடுகிறார். வில் கிடைத்தவுடனே ராமன் மீண்டும் 'கம்பீரமாக' நிமிர்ந்து நிற்கிறான்.)*

**அ.வ:** உன் பெயர் என்ன?

**ராமன்:** ராமன்

**அ.வ:** அப்பா பேரு?

**ராமன்:** தசரத சக்கரவர்த்தி

**அ.வ:** அம்மா பேரு?

**ரா:** கோசலை

**அ.வ:** அப்படின்னா நீங்கதான் தசரதனுக்கும் கோசலைக்கும் பிறந்த ராமன்கிறவரா?



படிப்பகம்

www.padippakam.com

ரா: அப்படி சொல்ல முடியாது என் தாயார் கோசலை...

அ.வ: என்னய்யா ஆரம்பத்திலேயே குழப்புற

ரா: அதாவது... எனது தந்தை தசரத சக்கர வர்த்திக்கு 60,000 மனைவிமார்கள்; இருந் தும் அவருக்கு நீண்ட காலமாக புத்திர பாக் கியம் இல்லை; ஆகையால் புத்திர காமேஷ்டி யாகம் என்று ஒரு யாகத்தை நடத்தினார். யாகம் முடிந்தவுடன் என்னு டைய தாயின் அந்தப்புறத்திற்கு ஒரு குதிரையை

*(வசிஷ்டர் ''அபிஷ்டு... அபிஷ்டு...'' என தலையில் அடித்துக் கொள்கிறார்)*

ரா.வ: அப்ஜெக்ஷன் யுவர் ஆனர்

*(வெறி வந்ததைப் போல் கத்துகிறார்)*

*சம்மந்தமில்லாத கேள்விகளைக் கேட்டு எனது கட்சிக்காரரை அரசு வக்கில் குழப் புகிறார். இது எங்கள் மத உணர்வைப் புண்படுத்துகிறது.*

நீதிபதி: ஆடர்... ஆடர்... அடுத்த கேள்விக் குப் போங்க.

அ.வ: சரி நேர விஷயத்துக்கு வரேன். உங்க ளுக்கும் உங்கள் மனைவிக்கும் ஏதாவது மனத்தாபம், சண்டைகள் உண்டா?

ரா: (வில்லன் சிரிப்பு சிரிக்கிறார்) என்ன ஒரு கேள்வி கேட்டு விட்டீர்கள். எங்கள் திருமணம் காதல் திருமணமய்யா. உங்கள் கம்பனைக் கேட்டுப் பாருங்களேன். ''அண் ணாலும் நோக்கினான் அவளும் நோக்கி னாள்...''

அ.வ: அதெல்லாம் தெரியும்யா... சம்பவத் தன்று என்ன நடந்தது அதச்சொல்லு

ரா: சம்பவ தினத்தன்று அதிகாலையில்... நான் அம்சதூளிகா மஞ்சத்திலே சயனித்தி ருந்த போது...

அ.வ: யோவ்... விஷயத்துக்கு வாய்யா!

ரா: நான் அரசவையில் அமர்ந்திருந்து நடன மங்கையரின் நடனத்தை ரசித்துக் கொண்டிருந்தேன். அப்போது அந்தப் புரத் தில் திடீரென்று ஒரு சத்தம். நான் ஓடினேன் அந்தப்புரத்திற்கு அங்கே... அங்கே... அங்கே

அ.வ: அங்கே என்னய்யா

ரா: அங்கே பூமி பிளந்திருந்தது. எனது சீதா தேவி பூமித் தாயின் கருப்பைக்கே சென்று கொண்டிருந்தாள்.

அ.வ: அப்போ அந்தப்புரத்தில் வேறு யார் இருந்தாங்க?

ரா: யாருமே இல்லை.

அ.வ: அப்படின்னா... சம்பவத்தை கண் ணால் பார்த்த வேற சாட்சிகளே இல்லையா?

ரா: ஆம்

அ.வ: சத்தம் கேட்டு அந்தப்புரத்துக்கு போனீங்க உங்கள் மனைவி பூமிக்குள்ள தான் போனாங்கன்னு எப்படி நிச்சயமா சொல்றீங்க?

ரா: நான்தான் அவள் பூமிக்குள் போய்க் கொண்டிருப்பதை என் கண்ணால் பார்த் தேனே.

அ.வ: என்ன சார்... லவ் பண்ணி கல்யா ணம் பண்ணினதா சொன்னீங்க நீங்க காப் பாத்த முயற்சிக்கலையா?

ரா: அவள் விதி முடிந்து விட்டது. நாம் என்ன செய்ய முடியும்?

அ.வ: சரி நீங்க போகலாம் நான் கூப்பிடும் போது வரனும்.

ரா: எமது அஸ்திரங்களை கொடுத்தீர்களா னால்....

டவாலி: என்னாது... அஸ்திரமா? போயா அதெல்லாம் கேஸ் முடிஞ்ச பின்னாலதான்.

2

டவாலி: மின்னல் கொடி... மின்னல் கொடி.... மின்னல்கொடி...

*(மின்னல்கொடி கூண்டில் ஏறி நிற்கி றாள்)*

அ.வ: உன் பேரென்னம்மா?

மி.கொ: மின்னல்கொடிங்கய்யா

அ.வ: சீதையை உனக்கு எத்தன நாளா பழக்கம்?

மி.கொ: ரொம்ப சின்ன புள்ளயிலிருந்தே பழக்கங்கய்யா.

அ.வ: அப்படின்னா நீ அயோத்திக்கு எப்ப டிம்மா வந்தே?

மி.கொ: இந்த ஆளுக்கு கட்டி கொடுத் தப்ப, சீரு சௌத்தியோட என்னையும் சேத்து அனுப்பிட்டாங்கய்யா

அ.வ: அப்படின்னா நீ சீதைக்கு ரொம்ப நெருக்கம்னு சொல்லு.

மி.கொ: ஆமாங்கய்யா, எந்த விசயத்தை யும் அம்மா எங்கிட்ட மறைச்சதே இல்ல

அ.வ: சம்பவ தினத்தன்னைக்கு என்ன நடந்துச்சு?

மி.கொ: அது ஏங்க, இந்த ஆளு அந்த அம்மாவ என்னிக்கி ராவணங்கிட்டயி ருந்து கூட்டிட்டு வந்தானோ அன்னையிலி ருந்து ஒரே ராவடி தாங்கய்யா.

அ.வ: என்ன தகராறு?

மி.கொ: வேறென்னா? சந்தேகந்தான். ஆசையோட வாழவந்த பொன்னா வீட் டுல வச்சி பாக்கலய்யா இவன். நெருப்புல இறக்கி பாத்தான்யா.

அ.வ: நெருப்புலயா.... என்னாச்சி?

மி.கொ: என்னா ஆச்சு... வெந்து போச்சு.

அ.வ: நோட்தில் பாயிண்ட் யுவர் ஆனர். நீ சொல்லும்மா

மி.கொ: அன்னயிலிந்து அந்தம்மாவக் கண்டாலே இவனுக்கு ஆவல, தென...ம் சண்டை.

அ.வ: சம்பவ தினத்தன்னைக்கு என்ன நடந்துச்சி? அதச் சொல்லு

மி.கொ: அட... வழக்கமான வம்புதாங்க. அன்னக்கி மத்தியானம் இந்த ஆளு சோறு திங்க வந்தாரு. எவனோ வழிமேல போர வன் அம்மாவ பத்தி தப்பு தன்டாவா ஏதோ பேசிக்கிட்டு போனானாம். இந்த ஆளுக்கு ரோசம் பொத்துக்கிட்டு வந்துடுச் சாம். ஒரே சண்டை.

அ.வ: என்ன சண்டை?

மி.கொ: இந்த ஆளு பேசினதெல்லாம் நாலு சனம் இருக்கிற சபையில் சொல்ல முடியுங்களா?

அ.வ: சரி அந்த அம்மா என்ன சொல் லிச்சு? அதையாவது சொல்லு.

மி.கொ: நான் அங்க நிக்கிலீங்க. ஆனா கேட்டிச்சி நாக்குப் புடுங்கிக்கிற மாதிரி கேட்டிச்சு.

அ.வ: அப்புறம்

மி.கொ: அவ்வளவு தாங்க. அப்பதான் அந் தம்மாவை கடைசியா நான் பார்த்தது.

அ.வ: ஏதாவது வெடிச்சத்தம் மாதிரி கேட் டிச்சா?

மி.கொ: வெடிச்சத்தமும் கேக்கலை, இடிச் சத்தமும் கேக்கல. இந்தாளு அந்தம்மா வைப் போட்டு அடிச்ச அடிச்சத்தம்தான் கேட்டிச்சு.

அ.வ: சரி நீ போம்மா. தட்ஸ் ஆல் யுவர் ஆனர்.

3

டவாலி: நாச்சிமுத்து... நாச்சிமுத்து... நாச் சிமுத்து

*(நாச்சிமுத்து கூண்டில் ஏறி நிற்கிறார்)*

அ.வ: உம் பேரென்னப்பா?

நா.மு: நாச்சிமுத்து.

அ.வ: உங்கப்பா பேரு?

நா.மு: வீரையன்

அ.வ: சொந்த ஊரு?

நா.மு: நம்ம பரம்பரையா அயோத்திதாங்க.

அ.வ: தொழில்?

நா.மு: சலவைத் தொழிலாளிங்க. பரம்ப ரையா அரண்மனை சேவகம் செய்யுற மிங்க.

அ.வ: சரி, கேக்குற கேள்விக்கு கரைக்டா பதில் சொல்லனும்.

நா.மு: சரிங்கய்யா.

அ.வ: ஆத்தங்கரையில வச்சு ராணியம்மா வைப் பத்தி நீ ஏதோ தாறுமாறா பேசுனி யாமே?

நா.மு: அய்யய்யே... அப்படியெல்லாம் எதுவும் பேசலீங்க.

அ.வ: அப்படின்னா... வேற என்ன பேசின?

நா.மு: நான் சொன்னது இதுதாங்க. நீ போயி சண்ட கின்ட போட்டு அந்தம்மாவ கூட்டியாந்த. கூட்டியாந்தவன் ஒழுங்கு மரி யாதயா வச்சி வாழவேண்டியதுதானே... அதவுட்டுட்டு நெருப்புல எறக்குனா அது என்னா நியாயம் - அப்படி சந்தேகப்பட்ட வன் அவன்கிட்டயே வுட்டுட்டு வந்திருக்க வேண்டியதுதானே. இதத்தான்யா நான் சொன்னேன். கதையையே மாத்திட்டானுங் கய்யா.

அ.வ: நீ பேசும் போது அங்க யாராவது இருந்தாங்களா?

நா.மு: சாமி சத்தியமா எம் பொண்டாட்டி யத் தவிர வேற யாரும் கெடயாதுங்க. அரன்மனை விசயத்தை நாலு பேர வச்சி கிட்டுப் பேசமுடியுங்களா?

4

டவாலி: வசிட்டர்... வசிட்டர்... வசிட்டர்

*(வசிட்டர் கூண்டுக்கு வந்து நிற்கிறார். டவாலி வசிட்டரைத்தொடுவது போல் அருகில் போக வசிட்டர் தொடாதே....*

படிப்பகம்

www.padippakam.com

*தொடாதே என்று தள்ளுகிறார்)*

**அ.வ:** உங்க பேரு என்ன பெரியவரே?

**வசிஷ்:** வசிஷ்டர்

**அ.வ:** ஊரு

**வசி:** யாதும் ஊரே... யாவரும் கேளீர்.

**அ.வ:** கிழிஞ்சுது போ. சரி உங்க அப்பாரு பேரு?

**வசி:** ஈரேழு பதினாலு லோகங்களையும் எட்டு திசைகளையும், சூரிய சந்திரர்களையும், எவன் படைத்தானோ அவனே என் அப்பன்.

**அ.வ:** யோவ், இது கோர்ட்டா என்ன? கேக்குறதுக்கு ஒழுங்கு மரியாதையா பதில் சொல்லணும். சரி... உன் தொழில் என்ன?

**வசி:** ராஜகுரு

**அ.வ:** எந்த ராஜாவுக்கு குரு?

**வசி:** சூரிய வம்சத்தின் ஏழேழு பரம்பரைக்கும் நான்தான் குரு!

**அ.வ:** ஏழு பரம்பரைக்கும் நீதான் குருவா... சரி உன் வயசென்ன?

**வசி:** கடலின் ஆழமென்ன?

*(ராமன் தரப்பு வக்கீல் ஹா...ஹா...என சிரிக்கிறார்)*

**நீதிபதி:** (முறைத்துப் பார்த்துவிட்டு) யோவ் பெரியவரே... கேக்குற கேள்விக்கு நேரடியா பதில் சொல்லு.

**அ.வ:** ராமனை உமக்குத் தெரியுமா?

**வசி:** தெரியுமாவா? இதோ இந்த தோளிலே தூக்கி வளர்த்தவனய்யா நான்.

**அ.வ:** சம்புகனை தெரியுமா?

**வசி:** கேள்விப்பட்டிருக்கிறேன்.

**அ.வ:** உங்களுக்கும் சம்புகனுக்கும் ஏதாச்சும் முன் விரோதம் உண்டா?

**வசி:** முன் விரோதமாவது, பின் விரோதமாவது அவன் ஒரு தேச விரோதி.

**அ.வ:** தேச விரோதியா? என்னய்யா பண்ணினான்?

**வசி:** அவன் ஒரு சூத்திரன். பிராமணர்களுக்கு போட்டியாக தவம் செய்ய முயற்சி செய்த சூத்திரன்.

**அ.வ:** அது உங்களுக்கு எப்படித் தெரியும்?

**வசி:** அயோத்தி நகர் பிராமணர்கள் என்னிடம் முறையிட்டார்கள். அதை விசாரித்து உரிய தண்டனை கொடுக்குபடி நான் தான் ராமனுக்கு உத்தரவிட்டேன்.

**அ.வ:** அப்போ நீங்கதான் கொலை செய்யத் தூண்டினீங்க அப்படித்தானே?

**வசி:** கொலையா? தருமத்தின்படி எதை செய்ய வேண்டுமோ அதை நான் செய்தேன். சூத்திரன் என்பவன் அடிமை வேலை செய்யப் பிறந்தவன். பிராமணனுக்கும், சத்திரியனுக்கும், வைசியனுக்கும் தொண்டு செய்வதுதான் அவன் குலத்தின் கடமை. அதை அவன் மீறினான்.

**அ.வ:** என்னய்யா செஞ்சான்? அதச் சொல்லு.

**வசி:** பிராமணர்களுக்குப் போட்டியாக தவம் செய்தான். இது சட்ட விரோதம். சூத்திரன் வேதத்தை காதால் கேட்டாலே காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டும் என்று நம் சனாதன தர்மம் சொல்கிறது. ஏன்?... சூத்திரன் சுடுகாட்டுக்குச் சமம் என்று நம் ஆதிசங்கரரே சொல்லியிருக்கிறாரே.

**அ.வ:** நீதான் கொலை செய்யத் தூண்டினதா மறுபடியும் ஒத்துக்கிற.

**வசி:** இது கொலையென்றால் இதுபோல ஆயிரக்கணக்கில் நாங்கள் செய்திருக்கிறோம். இதையெல்லாம் நீங்கள் விசாரித்து தீர்ப்பு சொல்லிவிட முடியுமா?

-ஏகலைவன் கேஸை விசாரித்தீர்களா?

-நந்தனார் கதையென்ன - எங்களுக்குத் தெரியாதா?

-அவ்வளவு தூரம் ஏன்? உங்கள் வெண்மணியில் நீங்கள் செய்தது என்ன?

மல்லாந்து படுத்துக் கொண்டு எச்சில் துப்பாதீர்கள். சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் ராமன் செய்தான்.

**அ.வ:** அப்போ.... ராமன்தான் இந்தக் கொலையை செஞ்சான்னு சொல்றீங்க.

**வசி:** கொலை... கொலை... கொலை. இந்த கெட்ட வார்த்தையைக் கேட்டு என் காதுகள் புண்ணாகிவிட்டன. சனாதன தர்மப்படி என்ன செய்ய வேண்டுமோ ஹிந்து தர்மப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைத் தான் அவன் செய்தான்.

**அ.வ:** நோட் தீஸ் பாயிண்ட் யுவர் ஆனர் - சரி நீங்க போகலாம்.

5

**டவாலி:** ராமன்.... ராமன்... ராமன்

*(ராமன் கூண்டில் வந்து நிற்கிறான்.)*

**அ.வ:** கனம் நீதிபதி அவர்களே! இந்த ரெட்டைக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சீதாராமன், கோதண்டராமன், ராஜாராமன், அயோத்திராமன் என்ற பல்வேறு பெயர்களில் உலவி வருகின்ற ராமன் என்கிற இந்த நபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகை சாட்சிகளுக்கு விசாரணை செய்ததின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவன் தன் மனைவி சீதையை ஏமாற்றி தீவைத்து கொளுத்தியிருக்கிறான். அவள் அதிருஷ்டவசமாக உயிர் தப்பியிருக்கிறாள். அதன் பின் அவளைக் கொலை செய்து புதைத்து இருக்கிறான். தடையங்களை அழிக்க முயற்சியெடுத்து இருக்கிறான். சாட்சிகளை மிரட்டியிருக்கிறான்.

ஒருபாவமும் அறியாத சம்புகன் என்ற தொழிலாளியை எவ்வித நியாயமான முகாந்திரமுமில்லாமல் திடீரென்று தாக்கிக் கொலை செய்திருக்கிறான். இந்தக் கொலைக்கு 'ராஜகுரு' என்று சொல்லப்படுகிற வைசிஷ்ட்டர் உடந்தையாகவும் தூண்டிவிடுபவராகவும் இருந்துள்ளார்.

ஏற்கனவே, இந்தியாவின் பல்வேறு நகரங்களில், பல்வேறு புனைபெயர்களில் தசாவதாரம் என்கிற பெயரில் போர்ஜரி, ஆள்மாறாட்டம், ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி, சதி, கற்பழிப்பு போன்ற பல கொடிய கிரிமினல் குற்றங்களுக்காக இவன் மீது பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டு பல ஆண்டுளாக விசாரணை நடத்தப்படாமல் உள்ளது. இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டும் இத்தகைய கிரிமினல் பேர்வழி இனிமேலும் வெளியில் நடமாடுவது சமுதாயத்திற்கே ஆபத்து என்கிற உண்மையை கணக்கில் கொண்டும், இவனுக்கு உரிய தண்டனை அளிக்கக் கோருகிறேன்.

குற்றம் சாட்டப்பட்ட இந்த நபர் இந்த நீதிமன்றத்தின் கருணைக்கும், இரக்கத்திற்கும் எள்ளளவும் தகுதியில்லாதவன் என்பதால் இவனுக்கு மிக அதிகபட்ச தண்டனையான தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பு கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நீதிபதி:** என்னப்பா.... இது சம்பந்தமா நீ எதாவது சொல்ல விரும்புறியா?

**ரா:** ஹா... ஹா... ஹா... (சிரிக்கிறான்)

**அ.வ:** யோவ் என்னய்யா சிரிக்கிற, அய்யா கேட்கிறாரு, ஒழுங்கா பதில் சொல்லு.

**ரா:** யதா யதாஹி தர்மஸ்ய......

**நீதிபதி:** என்னய்யா நான் இவ்வளவு சீரியஸா கேட்டுக்கிட்டிருக்கேன். நீ என்னமோ உளர்றே, புரியிற மாதிரி சொல்லுய்யா.

**ரா:** புரிந்தது... புரியாதது... தெரிந்தது... தெரியாதது எல்லாம் எமக்குத் தெரியும். ராம ராஜ்யத்தில் ராமன் மீதே விசாரணையா?

என் வீர பராக்கிரமங்களைப் பற்றி வால்மீகியிடம் கேட்டுப் பார்!

என் ஒழுக்கத்தைப் பற்றிக் கம்பனிடம் கேட்டுப்பார்!

என் காதல் லீலைகளைப் பற்றி துளசிதாசனிடம் கேட்டுப்பார்!

**அ.வ:** யோவ்! நீ என்னய்யா சொல்ற.... அத சொல்லு

**ரா:** மானிடப் பதரே! சூத்திர நாயே...! அற்பனே! யாரைப் பார்த்து நீ என்றாய். எங்கே என் கோதண்டம்.... வாலியின் உயிர் பறித்த என் அஸ்தியங்கள் எங்கே... ராவணனின் சிரம் சாய்த்த எனது அம்புகள் எங்கே... எங்கே...

**நீதிபதி:** ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ்டு.

*(ராமன் இழுத்துச் செல்லப்படுகிறான்)*

*6*

*தொலைக்காட்சி அறிவிப்பு*

*ஒரு முக்கிய அறிவிப்பு:-*

*இரட்டைக் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ராமன் என்கிற வாலிபர், நீதிமன்றத்திலிருந்து சிறைக்கு கொண்டு செல்லும் வழியில் காவலிலிருந்து தப்பிவிட்டார். அடையாளங்கள்...*

வயது: தெரியவில்லை

ஆனால் இளமையான தோற்றம்

நிறம்: பச்சை

போலீசாரால் தீவிரமாகத் தேடப்பட்டு வரும் இந்த நபர் கையில் வில், அம்பு போன்ற பயங்கரமான ஆயுதங்களுடன் நடமாடிக் கொண்டிருக்கிறார். தற்போது தலைமறைவாக இருக்கும் இந்த நபர் தனக்கு ஆதரவாகத் தனது கூட்டாளிகளைத் தூண்டி விட்டு நாட்டில் கலவரத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கி ஆட்சியைக் கவிழ்க்க முயற்சி செய்வதாகவும் கடைசியாக வந்த தகவல்கள் கூறுகின்றன. இந்த நபர் எங்கேனும் காண நேர்ந்தால் உடனே நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- செயலர், மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு.

○ மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

# கேட்டீரா சேதி!

● இரு வேறு ரௌடி கோஷ்டிகளுக்கு இடையே, அல்லது அரசியல் கட்சிகளுக்கு இடையே, அல்லது ரசிகர் மன்றங்களுக்கு இடையே கோஷ்டிப் பூசல் எழுவது நமக்குத் தெரிந்த ஒன்று. இதில் புது வரவு, பூரி ஜெகந்நாதர் கோவிலைச் சேர்ந்த பார்ப்பன பூசாரிகளுக்கு இடையே நடந்து வரும் மோதல். இக் கோயிலின் கர்ப்ப கிரஹத்தை மராமத்து பணிகள் செய்ய ஏதுவாக, தெய்வச் சிலைகளை வேறு இடங்களில் கொண்டு வைக்க கோரியுள்ளது இந்திய தொல் பொருள் ஆராய்ச்சி நிறுவனம். வெளியே கொண்டு சென்றால், வருமானத்தை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதில்தான் 300 பூசாரிகளுக்கு இடையே நடந்து வருகிறது கோஷ்டி மோதல். இம் மராமத்து பணிகளைச் செய்ய கனடா நாட்டு நிறுவனம் முன் வந்தது. ஆயின் 'மாட்டுக் கறி' தின்பவனை கோவிலினுள் அனுமதிக்கக்கூடாது என்று இந்து 'தர்மத்தை' எடுத்துக் கூறி தடுத்துவிட்டது. இக்கும்பலும், மாநில அரசும் பிறருக்கு 'வருனாசிரம்' தர்மம்! தனக்கு 'வரும்படி' தர்மம். இது தான் சாத்தான்களின் சாஸ்திரம்.

● "காஷ்மீரில் நாங்கள் வாழ்வதற்கான சூழ்நிலை இல்லை; எங்களுக்கு அரசாங்க வேலை வாய்ப்புகளும் - குறிப்பாக உயர் பதவிகள் - சுயவேலை வாய்ப்பு திட்டமும் மறுக்கப்படுகின்றன. எனவே, ஜீலம் நதியின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை இணைத்த (ஜம்மு பகுதி) ஒரு யூனியன் பிரதேசம் எங்களுக்குத் தனியாக வேண்டும்" என்கிறது 'பனுன் காஷ்மீர்' என்ற அமைப்பு. ஒரு மாநிலத்திலுள்ள சிறுபான்மையினர் தனி மாநிலமோ, யூனியன் பிரதேசமோ, கேட்டால், நாட்டின் ஆளும் கட்சிகள் கூச்சலையும், அடக்குமுறையையும் தான் கையிலெடுக்கும். ஆனால், இவர்களது கோரிக்கைப் பற்றி எந்த ஒரு ஆளும் கட்சியும் இதுவரை மறுப்பு கூட தெரிவிக்க வில்லை. காரணம், கேட்பது காஷ்மீர் பண்டிட்கள்!

● சால்மன் ருஷ்டி - 'சாத்தானின் கவிதைகள்' என்ற இவரின் நூலுக்காக, மதச் சர்வாதிகாரி கொமேனியால் மரணதண்டனை விதிக்கப்பட்ட பிரிட்டிஷ் நாவலாசிரியர். தலைமறைவாக வாழ்ந்து வரும் இவர், ஜெர்மானிக்குச் சென்று பத்திரிக்கைகளின் வாயிலாக தண்டனையை நீக்கச் சொல்லி கோரியிருந்ததற்காக இவரின் தலைக்கான பரிசுத் தொகையை கூட்டியுள்ளது ஈரான் அரசு. 'சவம் தின்னும் எறும்புகள்' எனும் விமர்சன நாடகத்தை நடித்ததற்காக, கேரளத்தைச் சேர்ந்த 11 பேர்களுக்கு ஆறு வருட சிறை தண்டனை விதித்துள்ளது ஷார்ஜா நீதிமன்றம்; பாரதிய ஜனதா தனது 'புதிய தொல்பொருள் கண்டு பிடிப்புகள்' சம்மந்தமான குறிப்புகளை, ஆராய்ச்சி செய்ய வரலாற்று ஆசிரியர்கள் முயலுவதை எதிர்க்கிறது. இந்த மூன்று நிகழ்ச்சிகளும் ஒன்றைத் தெளிவுபடுத்துகின்றன. 'மத அடிப்படைவாதம் விமர்சன சுதந்திரத்திற்கும், கருத்து சுதந்திரத்திற்கும் எதிரானது' என்பதுதான் அது.

● சாம்பெய்ன் இந்தியா லிமிடெட் எனும் இந்திய நிறுவனம், தான் தயாரித்துள்ள ஒயின் மது பானத்துக்கு 'கௌதம புத்தா' என்னும் பெயர் சூட்டி, ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இதற்கு எதிராக இலங்கையின் பௌத்த மதத்தினர் தீவிர எதிர்ப்பு தெரிவிக்கவே, "இலங்கை அரசுடன் பேச்சு நடத்த எண்ணியுள்ளோம்; சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து வருகிறோம்; நடவடிக்கை எடுக்கப்படும்" என அரசு அறிக்கை விட்டுள்ளதே தவிர, இம் மது வைத் தயாரிக்கும் நிறுவனத்துக்கு விளக்கம் கேட்க இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

● 'பைலட்பாபா' என்றழைக்கப்படும் மகா யோகி கபில் அத்வைத் டில்லியில் நான்கு நாட்கள் ஜல சமாதியில் இருந்துள்ளார். வெளியில் வந்தவுடன், தனது ஜல சமாதியைப் பற்றி விமர்சித்திருந்த நாளிதழ்களை கடுமையாகத் தாக்கியுள்ளார். 'வெளி உலகத் தொடர்பே இல்லாத பொழுது இது எவ்வாறு சாத்தியம்' என நிருபர்கள் வினவிய துடன், அவரின் இடுப்பு மற்றும் மணிகட்டின் மேல் பகுதிகளில், நீரில் தொடர்ச்சியாக இருந்ததற்கான அறிகுறிகள் இல்லை என்பதனையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.



டில்லியைச் சேர்ந்த பகுத்தறிவாளர்கள் சங்கம், "இவன் ஒரு மோசடிக்காரன்; இந்த நபரை கைது செய்ய வேண்டும்" என போலீசில் முறையிட்டுள்ளனர். ஆதாரம் இல்லை என்ற காரணம் கூறி போலீசு, இந்த செப்படி வித்தைக்காரனின் மீது முதல் தகவல் அறிக்கைகூட பதிவு செய்து கொள்ள வில்லை.

● இ.பி.கோ. 377 - ஓரினச் சேர்க்கைக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்து வருடம் வரை சிறை தண்டனை விதிக்கும் சட்ட ஷரத்து. இந்த ஷரத்து நீக்கப்பட வேண்டும் என்கிறது 'ஆரம்ப்' என்ற ஓரினச் சேர்க்கை சுதந்திர அமைப்பு. 'சகி' என்ற இன்னொரு அமைப்பும் இதை ஆதரிக்கிறது. இவை இரண்டுமே இந்தியாவில் தான் செயல்படுகின்றன. இதேபோல் சீனாவிலும் குரல்கள் எழ ஆரம்பித்துள்ளன. உலகெங்கும் இது போன்ற அமைப்புகள் பெருகி வருகின்றன. 'தனிநபர் சுதந்திரம்' என்ற பெயரில் "எய்ட்ஸ்" நோய் பரப்பும் இந்தச் சீரழிவைத்தான் அங்கீகரிக்கச் சொல்லி கூக்குரலிடுகின்றன, இவ்வகை அமைப்புகள்.

● ஸ்வெட்டா, தானியா - 13, 14 வயதுடைய இளம் பெண்கள். தற்பொழுது மாஸ்கோவிலுள்ள ஓர் அனாதை விடுதியில் இருக்கின்றார்கள். இவர்களுடன் தாஷ்கன்டைச் சேர்ந்த 16 வயது இளம் கர்ப்பினிப் பெண்ணும், மற்றும் இவர்களைப் போல 300 இளம் பெண்கள் இந்த அனாதை விடுதியில் இருக்கின்றார்கள். தினமும் 40 இளம் பெண்கள் ரயில்வே நிலையத்திலிருந்து அனாதை விடுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள். இவர்களுக்குள் பல்வேறு ஒற்றுமைகள் உண்டு. அனைவரும் அனாதைகள் அல்லது பெற்றோரால் கைவிடப்பட்டவர்கள்; 'ஓட்கா' குடிப்பதற்காக தமது உடலை விற்கும் இளம் விபச்சாரிகள். தங்கள் இளம் குழந்தைகளை விற்று, மதுபானம் குடிக்கும் பெற்றோர்களும் பெருகி வருகின்றனர். மாஸ்கோவில் மட்டும் 11-லிருந்து 12 வயதுக்குள் பால்வினை நோயால் பாதிக்கப்படுபவர்கள் 5 பேருக்கு ஒருவராக உள்ளனர். தடையின்றி வீசும் 'சுதந்திரக்' காற்று ரசியாவை முழுக்க மேற்குலகுடன் ஐக்கியப்படுத்தி விட்டதற்கு இதையும்விட சான்று வேண்டுமா?

● மண்டல் எதிர்ப்பு போராட்டம் தீவிரமாக இருந்த 90-ல் "தீக்குளிக்க முயற்சித்தவர்களில் 96 சதவீதத்தினர், செய்தி பத்திரிக்கைகள் அப்போராட்டத்தை மற்றுமொரு சுதந்திர போராட்டம் போலவும், தீக்குளித்து இறந்தவர்களை வீர தியாகிகளாகவும் சித்தரித்து மனவெழுச்சிகளைத் தூண்டியதன் காரணமாகவே, தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர்" என டாக்டர் சந்தோஷ் என்பவர் தலைமையில் நடந்த ஆய்வு தெளிவாக்கியுள்ளது. எதிர்த் தரப்பை சாதியால் நாட்டைப் பிளக்கின்றார்கள் என குற்றம் சுமத்திய 'தேசிய'ப் பத்திரிக்கைகளும், அதன் பின்னிருக்கும் உயர்சாதி கும்பலும் இவ்வறிக்கையின்படி கொலைக்குற்றம் புரிந்தவர்கள்தானே!

● அயோத்தியா பிரச்சனையில் பி.ஜே.பி அடிக்கடி "மிகப் பெரும்பாலான இந்துக்கள் ஆலயம் அமைக்கப்பட வேண்டும் எனக் கருதுகின்றனர்" எனக் கூறிவருகிறது. ஆனால், ஆய்வுகள் மக்களின் கருத்தை வேறுவிதமாகப் பிரதிபலிக்கின்றன. "பி.ஜே.பி அயோத்தி பிரச்னையை அரசியல் சுயலாபம் கருதி கையாள்கிறது" என 68 சதவீதத்தினர் கருத்துக் கூறியுள்ளனர். மசூதி இடிக்கப்படுவதை 12 சதவீதத்தினரே ஆதரிக்கின்றனர். ஆலயம் கட்டலாம் என்ற கருத்தையே கூட ஆதரிப்போர் 14 சதவீதம்தான்.

— தொகுப்பு: பிரகாசம்

படிப்பகம்

www.padippakam.com

# கன்னி யாத்திரை

ஒன்னாந் தேதியிலிருந்து பத்து தேதி வரை ராஜா தேசிங்கு குதிரை மாதிரி துள்ளிக் குதித்து ஓடும் நாட்கள், பத்து பதினைந்து தேதியானவுடனேயே உப்பு வண்டி மாதிரி நகரமறுக்கும். என்னென்னவோ வாங்குவதாய் திட்டமிட்டு மளியக் கடை கணக்கிலேயே ஆசைகள் மூர்ச்சையாகிவிடும். அந்தோணிக்கும் அப்படித்தான். வட்டிக்கு விட்டு ஊரையே வளைத்துவிட்ட பள்ளிக்கூட வாத்தியார்கள் மத்தியில் அந்தோணி இன்னும் வாடகைவீடும், ஆஸ்த்துமாவுமாய் வாழ்வது மற்றவர்களுக்கு வியப்பாய் இருந்தது.

''அந்த காலத்துலேயே உங்களுக்கு சுதாரிக்க தெரியல சார்'' குமாஸ்தா பலராமன் வாயளவில் வருத்தப்பட்டார்.

''எங்க சார் சுதாரிக்கிறது... சரியா இருபத்தஞ்சு வயதிலே வேலைக்கு வந்தேன். கூட பொறந்த தம்பி, தங்கைன்னு கொஞ்ச வருஷம் போச்சு. அவங்கள ஒருவழி சேத்தப்புறம், கல்யாணம், மனைவி, பொண்ணுங்கன்னு... மத்ததை விடுங்க. நாலு நாளா இந்த சைக்கிள் டயர் வீங்கி வடியுது அதுக்கு ஒரு புது டயர் டியூப் வாங்க துணியல.'' பஞ்சபடியும், கிராக்கிப்படியும் நின்றுவிட்டால் வால்டியூப்பை பிடுங்கிவிட்ட டியூப் போல.. வற்றிவிடும் நடுத்தர வர்க்கத்தின் உற்சாகம் அந்தோணியின் வார்த்தையிலும் வெளிப்பட்டது.

அந்தோணி சைக்கிளை நிறுத்தி, ஸ்டாண்ட் போடும் சத்தம் கேட்டவுடனேயே, அன்னம்மா விரைந்து வந்து டிபன் பாக்ஸ் பையை வாங்கினாள். கை, கால் அலம்பிவிட்டால், ஜெபத்தை முடித்து விட்டுத்தான் காபியை தொடுவது அந்தோணிக்கு வழக்கம். வழக்கத்திற்கு மாறாய்... ஈஸி சேரில் சாய்ந்து இமைகளை தாழ்த்தி யோசனையில் கிடந்தார்.

''ஏங்க என்னவோ மாதிரி இருக்கீங்க.. உடம்புக்கு ஏதுமா?''

''ம்ம்ம்... ஒண்ணுமில்ல.. இன்னும் கொற காலமும் எப்படி ஓட்டுவோம்னு தெரியல...''

''ஏன் கவலப்படறீங்க...''

''இன்னும் ஆறு மாசத்துல என் சர்வீஸ் முடிஞ்சிடும். ரிட்டையர்டு தெரியுமா?''

''அதுக்குள்ளவா...!''

''பின்னே, எனக்கு வயசாகலையா... சம்பளத்த வச்சே நாம ஒண்ணும் செஞ்சிக்க முடியல. இனிமே பென்ஷன வச்சி எப்படி வாழறதுன்னு குழப்பமா இருக்கு''

''நீங்க சும்மா எதையாவது நெனச்சு மனச குழப்பிக்காதீங்க. நமக்கு ரெண்டும் பொண்ணா இருந்தாலும், ஜோன்சு காலேஜ் முடிச்சிட்டா.. எங்காவது வேலைக்கு சேத்திடலாம்.. சின்னவளும் ப்ளஸ் டு முடிச்சிட்டா.. டைலரிங் அனுப்பலாம்... ஒண்ணும் பிரச்சினை இல்ல. இந்தாங்க காபி சாப்பிட்டு மாத்திரையை போட்டுக்குங்க''

குடும்ப பாரம் குடை சாயும் போதெல்லாம் அந்தோணிக்கு மனைவிதான் ஊன்றுகோல். அன்னம்மாவின் ஆறுதல்மொழி கொஞ்சம் தெம்பு தந்தது போல எழுந்தார்.

''காபியை மூடி வை ஜெபிச்சிட்டு வர்றேன்.''

''ஏசுவே, பிதாவே...'' பிரார்த்தனை நீண்டது.

அந்தச் சிலுவை நாயகனை பார்க்கும் போதெல்லாம் அந்தோணிக்கு சோகத்தின் பரப்பளவு சுருங்கிவிடும். இரத்தம் சொட்ட, முட்கிரீடம் பதிய... ஏசுபிரானின் வாடிய முகத்தில் தன் முகத்தை தொலைத்துவிடும். நிம்மதியும், நிறைவும் அந்தோணிக்கு பிடித்தமானது. பிதாவின் பேரிழப்புகளுக்கு முன்... அந்தோணியின் கால்களும், கவலைகளும் மண்டியிட்டு விடுகின்றன.

சர்ச்சுக்கு போக வேண்டும் என்ற உற்சாகத்தைவிட ஜோன்ஸ் சிநேகிதங்களைச் சந்திப்பதிலேயே உற்சாகமாய் இருந்தாள். அதுவும் உள்ளூரிலேயே இருக்கும் ராணியை சந்திக்க போனால் பொழுதுகளையே மறந்து விடுவாள். ராணி மட்டும் கூடத்தில் கதை படித்துக் கொண்டிருந்தாள்.

''எங்க ராணி அம்மாவை காணோம்?''

''வா ஜோன்ஸ்... நாளைக்கு என்னை பெண் பார்க்க வர்றாங்கல்ல. அதுக்கு காய்கறி, மளிகை சாமான் வாங்க போயிருக்காங்க.''

''ம்ம்ம்... புரியுது.புரியுது. ஆம்பளைங்க குடும்பத்தோடவந்து சைட் அடிச்சிட்டு சகல மரியாதையோட சாப்பிட்டு போவாங்களே அதானே பொண்ணு பாக்கறது'',

''சே!சே! இவுரு நல்லவரு..''

''அடேங்கப்பா..வர்றதுக்கு முன்னாடியே வக்காலத்தா,''

''அதுக்கில்லடி..இவுரு என் முறைப்பையன்...
உங்கிட்ட முன்னகூட சொல்லியிருக்கேன் ஐ.ஐ.டி.யில வேல பாக்குறார்னு சொல்வேன்ல அவர்தான்,''

ஜோன்ஸ் உதட்டை பிதுக்கி கேலியாகச் சிரித்தாள்,

''அப்படியா... அப்ப சரியான ஜோடிதான்,''

ராணி ஜோன்ஸை செல்லமாய் தட்டினாள்

''சீ... கிண்டலா இரு... இரு. உங்க வீட்டுக்கு வந்து அம்மாவ பாத்து. சீக்கிரம் ஜோன்ஸை ஒருத்தன் கைல புடிச்சி குடுந்துடுங்கன்னு அவங்க பாணியிலேயே சொல்லிட்டு வந்திடுறேன்''.

திருமணம் என்பது தொடமுடியாத வானவில்லாய்..
ரசிக்க முடிந்த ஜோன்சுக்கு ராணியின் வார்த்தை ஆவலைக்கூட்டியது.

''நம்ப ப்ரெண்ட்ஸ் எல்லோருக்கும் கல்யாணம் ஆனாதான் எனக்கு...''

விரக்தியை மறந்து சிரித்தாள்.

''சரி நான் வரேன் ராணி. நீ ஒரு நாள் வீட்டுக்கு வா,''

''இரேண்டி அம்மா வந்தோன்ன பாத்திட்டு போகலாம்,''

''ஸாரிடி.. லேட்டாயிடும் ராணி.. போன வாரம்கூட நான் சர்ச்சுக்கு போகல..இன்னைக்கும் போகல.. அப்பா வேற கோபிச்சிப்பாரு..முன்நேரத்துல போனாலாவது.. சமைச்சுவச்சி... நல்லபேரு வாங்கிக்கலாம்..'',

சிநேகிதங்க பாதிபேருக்கு திருமணம் முடிந்துவிட்டது. சிலபேருக்கு கல்யாணப் பேச்சாவது அடிபடுகிறது..உனக்கு? கேள்விகள் நச்சரிக்கும் போதெல்லாம் அப்பாவின் ஆஸ்த்துமாவும் அம்மாவின் கரிபடிந்த கையும் முன்வந்து கடமையை உணர்த்தும்.

''பெத்து.. படிக்கவச்சி... ஆளாக்குனவங்களுக்கு செஞ்சிட்டுத்தான்... மத்ததெல்லாம்...
கனவுகளை ஓரமாய் முடிந்து வைத்தாள்... லாலா கடை மிட்டாயை மொய்க்கும் ஈக்கள் மாதிரி அடிக்கடி வரும் ஆசைகளை விரட்டியடிக்க ஜோன்ஸ் சமயத்தில் ஜெபம் என்ற பெயரில் மறந்து கிடப்பாள்.

உருண்டை வெல்லத்தை துணியில் முடிந்து வைத்தமாதிரி ரஃபேல் பாதிரியார் மேடையில் நின்றார்.

''பாரம் சுமப்பவர்களே... தேவனே உங்களுக்கு இளைப்பாறுதலாய் இருக்கிறான்'', இன்னும் பைபிளை பக்கத்திற்கு பக்கம் பார்த்து ஏப்பம் விடுவது போல வாயசைத்தார் ரஃபேல் பாதிரி.

ஜெபம் முடிந்து சபை கலைய ஆரம்பித்தது. ஜெபமாலையும், பைபிளுமாய் ரஃபேல் பாதிரியார் நிற்பதைப் பார்த்தால், ''தேவ தூதனையே'' பார்ப்பது போல் இருப்பதாக அந்தோணி அன்னம்மாவிடம் கூறி வியந்தார்.

''பாதரை ஆவலுடன் நோக்கினார்''.

''வணக்கம் பாதர்''

''ஓ வாங்க.. வாங்க... நலமா இருக்கீங்களா?'' செயற்கைத்தனமாய் புன்னகை பொழிந்து வரவேற்றார், மேய்ப்பரின் தூதுவர். மந்தைகளை கவனித்தபடியே அந்தோணியையும் விசாரித்தார்.

''எங்க, இரண்டு வாரமா ஜோன்சைக் காணோம்?''

''இன்னும் விளையாட்டுப் பிள்ளையா இருக்கா ஃபாதர். இப்பதான் காலேஜ் முடிச்சிருக்கா. வேலை தேடுறோம்''

''அன்னம்மா.. நீங்க ஒண்ணும் கவலப்பட வேணாம். தேவகிருபை அவளுக்கும் உண்டு, அவள் இன்னும் சிறியவள்தான். நாம விடலாமா. சர்ச்சுக்கு வர்றது நம்ம கடமை, ஜோன்சுக்கு புரியும்படி சொல்லி அழச்சிட்டு வாங்க. சர்ச்சுக்கு வராம எப்படி மனதில் சாத்தானின் ஆட்சி ஒழியும். தேவசபையின் பேரொளி அவளுக்கு கிடைக்கணும் புரியுதா...''

ரஃபேலின் தூண்டில் வார்த்தைகளில்

படிப்பகம்

www.padippakam.com

யாரும் தப்ப முடியாது.

அன்னம்மாவும் வார்த்தைக்கு வார்த்தை தலையாட்டி ஃபாதரை நிறைவு படுத்தினாள். ''ஃபாதர் ஜோன்சுக்கு நீங்களே ஒரு நல்வழி காட்டுங்க''. அந்தோணி வரம் கேட்பதுபோல நின்றார்.

''அந்தோணி! ஜனிக்கும் ஜீவனுக்கெல்லாம் கணிப்பு கர்த்தரிடம். உங்க நல்ல குடும்பத்துல ஜோன்சுக்கு ஒன்னும் பிரச்சினை இல்ல. அவள நம்ப மடத்துலேயே சிஸ்டராக்கிடறேன். உங்களுக்கு எந்த பாரமும் இல்ல. நான் பாத்துக்குறேன். என்ன யோசிக்கிறீங்க?. ரஃபேலின் ஆசை வார்த்தைகளில் ஒரு கனம் மனம் சிக்கித் தவித்தாலும், இதை விடவும் எதிர்காலத்துக்கு உத்திரவாதமான வேலை வேறு இருப்பதாய் அந்தோணிக்கும் அன்னம்மாவுக்கும் படவில்லை.

கல்யாணம், காட்சி பண்ணி வைப்பதென்றால் உடனடி வழியுமில்லை. இதுவே மகளை கரைசேர்க்க ஏற்ற வழியாய்ப் பட்டது. அதுவும் ரஃபேல் பாதிரியாரின் வார்த்தைகள் ஏசுவை அறைந்த ஆணிகளை விடவும் சக்தி வாய்ந்தவை. சூழ்நிலையும், தேவ மகிமையும் தன் குடும்பத்துப் பக்கம் வந்ததாய் தெரிந்தது.

''ஃபாதர் ஜோன்ஸ்கிட்ட இது சம்பந்தமா நான் பேசுவதைவிட நீங்க சொன்னா நல்லா இருக்கும்''

''ஓ.கே. முடிஞ்சா சொல்லுங்க இல்லைன்னா ஜோன்ஸை நான் வரச்சொன்னதா சொல்லுங்க. தேவனின் சந்நிதான கிருபை உங்களுக்கு இருக்குதா பார்க்கலாம்...!''

பசி ஏப்பத்தோடு இருப்பவனுக்கு முன் பலகாரக்கடை வைத்தது மாதிரி ரஃபேல் வார்த்தைகளை வீசி ஏங்க வைத்தார்.

அந்தோணிக்கும், அன்னம்மாவுக்கும் மனச்சுமை குறைந்தது மாதிரி இருந்தாலும், கொஞ்சம் நெருடலாகவே பட்டது. ஆனால், அந்தோணிக்கோ... 'சிஸ்டர் ஆவது' புனிதம் என்பதோடு அசைக்கமுடியாத வாழ்க்கை உத்திரவாதமாக பட்டது.

''அங்க, இங்க வேலை தேடுவதைவிட நம்ப மடத்துலேயே 'நன்' ஆனா... எதிர்காலத்துல எவ்வளவு சலுகை...''

அந்தோணிக்கு மகள் விஷயத்திலும் உணர்வுகளைவிட அறிவின் ஆதாயமே பெரியதாக பட்டது.

''நம்ப பொண்ணு நம்ப சொல்றத கட்டாயம் கேட்பாங்க. சின்னஞ் சிறுசுதான.. நாம சொன்னா புரிஞ்சுக்குவா''



படிப்பகம்

அன்னம்மாவும் ஒத்திசைந்தாள்.

ஜோன்ஸ்க்கு வழி காட்டிவிட்டால், அடுத்திருக்கும் எமிலிக்கு ஜோன்ஸே நம்ப கமான சூழ்நிலையை உருவாக்கித் தருவாள் என்பதும் அவர்கள் எண்ணம். இருப்பினும், மகளிடம் போய் ''நீ 'சிஸ்டர்' ஆயிடலாம் ஜோன்ஸ்'', என்று கூறும் அளவுக்கு அந்தோணி ரஃபேலைப் போல முற்றும் துறந்தவராயில்லை துணிவுமில்லை.

''ஜோன்ஸ்ம்மா உன்னை ஃபாதர் வரச் சொன்னாரு''

''எதுக்குப்பா...?'' சர்ச்சுக்கு வராத பயத்தில் ஜோன்ஸ் கேட்டுத் துடித்தாள்.

''தெரியல'' ஏதோ உன்கிட்ட பேசணுமாம்''

ஜோன்ஸ் அதை அவ்வளவாக அக்கறையாக எடுத்துக் கொள்ளவில்லை. சின்ன வயதிலிருந்தே பாதிரியாரைப் பார்த்தால் பிரம்பை மறைத்து வைத்திருக்கும் ஆசிரியரைக் கண்டது போல ஒரு பயம் அவளுக்கு. கன்னிமாதாவின் களங்கமற்ற முகமும், ஏசுவின் சோக முகமும் மனதை பாதித்த அளவுக்கு 'புவியீர்ப்பு விசைக்கு பொருத்தமில்லாத' பாதிரியின் கூப்பாடு ஜோன்சை பாதிக்கவில்லை.

டி.வி.யில் வரும் பாசமுள்ள கணவன் போல இணைந்து வாழும் ஒரு துணைக்கே மனம் ஏங்கிடினும் அப்பா - அம்மாவின் விருப்பத்துக்கு ஒருபடி தள்ளியே ஆசைகளை வளர்த்தாள்.

அன்று சிநேகிதி ராணியின் நிச்சிய தார்த்தத்திற்கு அவசரமாக கிளம்பிக் கொண்டிருந்தாள் ஜோன்ஸ். அந்தோணிக்கு தோசை ஊற்றிக் கொடுத்துக் கொண்டே அன்னம்மா பேசியது காதில் விழ முதன்முறையாக ஜோன்ஸ் ஒட்டுக் கேட்டாள்.

''ஏங்க... இவ ஃபாதரையே பாக்க போக மாட்டேங்குறா. எப்படிங்க சொல்றது?''

''நீயே நேரா சொல்லிடேன், சிஸ்டர் வேலை எல்லோருக்கும் கிடைக்காது. தேவன் கிருபையால நம்ப குடும்பத்துல உனக்கு வந்திருக்குன்னு சொல்லேன்''

''நல்லதா இருந்தாலும் நம்ப சொன்னா புரிஞ்சிப்பாளா... நம்பளே நாளைக்கு போயிட்டாலும் அவளுக்கு இதாங்க பாதுகாப்பு, எமிலிக்கும் நல்லது. ஜோன்சுக்கு அன்னம்மாவின் ஏக்க பெருமூச்சை கேட்க சகிக்கவில்லை.

அம்மா, அப்பாவின் கவலைக்குதான் ஒரு காரணம் என்பதை உணர்ந்தவுடனேயே சொந்த உணர்வுகள் மழுங்கின. ஓடிக்கொண்டிருக்கும் முயலை திடீரென நான்கு கால்களையும் பிடித்தது மாதிரி, நிலைகுலைந்து உணர்ச்சி ததும்பினாள். ஒரு நொடி கோபமும் அப்பாவின் கடைசி ஆசைக்கு கைகொடுப்பதில் தப்பில்லை என அடங்கிற்று. கண்களை துடைத்துக் கொண்டு, களைத்துக் கொண்டாள்.

''ஃபாதர் வரச்சொன்னாராப்பா?''

''ஆமாம்... ஜோன்ஸ்...''

அந்தோணியும், அன்னம்மாவும் ஒத்திசைந்து கூறியது ஜோன்சின் மிச்ச சொச்ச ஆசைகளையும் வென்றது.

''ஃபாதர்...'' ஜோன்ஸ் கசாப்புக் கடையின் படியேறிய ஆடாய் நிலைகுலைந்து நின்றாள்.

''ஓ, ஜோன்ஸா, வாம்மா... உனக்கு செய்ய வேண்டிய உதவிலை தரவேண்டிய காலம் வந்திருச்சி'' ஃரபேலின் புன்னகை எரிச்சலூட்டியது.

''வீட்ல சொன்னாங்க ஃபாதர் எப்ப சேரலாம்.

''ஓ! ரொம்ப தயாரா இருக்க. உன்னை விளையாட்டு பிள்ளைன்னு சொன்னாங்க. தூய தொண்டிற்காக வாழ்வை வழிநடத்தும் சக்தியுள்ள பெண்ணை பெற்றதற்கு அந்தோணி தம்பதிகளை ஆசீர்வதிக்கிறேன்.''

வழிமாறிய ஆட்டுக்கு வரவேற்பு என்ன மௌனத்தில் புகைந்தாள்.

''ஜோன்ஸ்... நீ நாளை காலை வா. நாம ஆயரை பார்த்து பேசிட்டா... தஞ்சாவூர் மடத்துல சேர்த்திடலாம். மூணுவருசம் ட்ரெயினிங் முடிஞ்சப்பிறகு நம்ப ஆலயத்தின் மருத்துவமனைக்குக் கூட வந்திடலாம்...''

'சரி ஃபாதர், நாளைக்கு வரேன்'

கமான் சைல்ட், காட் ப்ளஸ் யூ'

ரஃபேலுக்கு மந்தையின் எண்ணிக்கையில் ஒன்று கூடிய உற்சாகம். ஜோன்சுக்கோ யாரிடமும் வெளிகாட்ட முடியாத உள்காயம்.

''ஜோன்ஸ் உன் சிநேகிதி மல்லிகா கிட்டேயிருந்து கடிதம் வந்திருக்கு இந்தா...'' கடிதத்தை கொடுத்துவிட்டு அன்னம்மா எந்த சலனமும் இல்லாமல் வேலையில் புதைந்தாள்.

அம்மா உன்னால் எப்படி இப்படி இருக்க முடிகிறது. என்னை பற்றி என் இளமையை பற்றி அக்கறை இல்லியா'' மனம் ஏங்குகிறது... கடிதத்தை பிரித்தாள்.

''இனிய ஜோன்ஸ்,
எனக்கு பிரசவம் நலமாய் முடிந்து
இந்த வாரம்தான் வீட்டுக்கு வந்தோம்''
நீ அவசியம் ஒருமுறை வரவும்.
குழந்தை அவன் அப்பா ஜாடை
பொக்கை வாய் காட்டி அனைவரையும்
மகிழ்விக்கிறான். சரி, நீ
எப்போது எங்களுக்கெல்லாம் உன்
திருமண
சந்தோஷத்தை தெரியப்படுத்தப் போகிறாய்...''

கடிதத்தை தொடர்ந்து படிக்க முடியவில்லை.

தடம்புரண்ட ஆசைகளின் தவிப்பை அடக்கி மாளாமல் அழுதாள். ஏசுவிற்கு முன் எரிந்து உருகும் மெழுகுவர்த்தியோடு இனி அவள் இளமையும் பரிகாசங்களை அணிந்து கொண்டது போல வெண்ணிற ஆடைக்குள் தன் தோல்வியுற்ற முகத்தை நினைக்க, நினைக்க, அவளுக்கு கோபம் பொங்கிற்று.

ரஃபேலுக்காகவோ, ஏசுவுக்காகவோ, அவள் கன்னியாயிருக்க தயாராயில்லை. ஆனால், அம்மா அப்பாவுக்காக மனம் குழம்பிக் கொந்தளித்தது. நியாயமான ஆசைகளுக்கு ஆணி அறைவதை ஏற்றுக்கொள்ள முடியாமல், மாற்று வழிக்கு ஏங்கினாள்.

**— துரை.சண்முகம்**

## ''நாங்கள் தமிழர் அல்ல!''
## பார்ப்பன சங்கராச்சாரி வாக்குமூலம்

கல்கி (29.11.'92)-ல் சங்கராச்சாரி (சீனியர்) அருள்வாக்கு வந்துள்ளது: ''(வைதிகர்கள் தங்கள் பசங்களை தினம் ஸாயந்திரம் ஒருமணி ஸ்நானம் பண்ணி மடிகட்டிக் கொண்டு, நெற்றிக்கு இட்டுக் கொண்டு ஒரு பொது இடத்தில் ஒன்றாகக் கூடி கொஞ்சமாவது வேதாப்யாஸம் பண்ணுவதற்கும் ஸ்தோத்திரங்கள் கற்றுக் கொள்வதற்கும் ஒவ்வொரு பேட்டையிலும் ஏற்பாடு செய்ய வேண்டும். பிராம்மணரல்லாதாருக்கும் வேதாப்யாஸம் தவிர மற்ற திணுஸில் மதாபிமானம், தெய்வ பக்தி உண்டாகும்படியான ஏற்பாடுகளைப் பண்ண வேண்டும். நீராடுவது, நீறுபூசுவது (அல்லது திருமண் இடுவது), தேவார திருவாசக திவ்ய பிரபந்தங்களை ஓதுவது என்று வைத்துக் கொள்ளலாம்...''

— இது அருள்வாக்கல்ல; வாக்குமூலம். இந்துமதம் எல்லாருக்கும் என்கிறார்கள்; இந்து மதத்துக்கு அடிப்படை வேதம் என்கிறார்கள். ஆனால், வேதப் பயிற்சி பார்ப்பான் தவிர சூத்திரர்களுக்குக் கூடாது என்று சங்கராச்சாரி சொல்கிறார். சூத்திரன் எச்சில் வேதம்பட்டால் தீட்டு. அப்புறம் எதுக்கு வேய் இந்து மதத்துக்குள்ளே வா, வா என்று கூப்பிடுகிறாய்?

இந்திரா பார்த்தசாரதி போன்ற இதயத்தில் பூணூல் மாட்டிய பார்ப்பனர்கள் அத்தனை வருணாசிரமக் கொடூரங்களையும் பூசிமெழுகி மூடி மறைத்து 'எல்லாரும் திராவிடரே' என்று கியயா கியயா எனக் கத்துகின்றனர். ஆனால், தனது ஆன்மகுருவின் கட்டளையை எடுத்துப் போட்டு மறைமுகமாக இ.பா.-க்கும் சேர்த்து ஆப்பு அடித்திருக்கிறது கல்கி. பார்ப்பான் சமஸ்கிருதத்தில் வேதம் படிக்கட்டும். அவனைத் தவிர மற்றவர்கள் திராவிடமொழியில் மதத்தைப் படித்துப் புரிந்துகொள்ளட்டும். இதுவே சங்கரர் வாக்குமூலம். தமிழர்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

www.padippakam.com

# கமண்டலம் கட்டளை இடுகிறது!

*(மூல ஆதாரம்:* எகனாமிக் அண்டு பொலிடிகல் வீக்லி, கட்டுரை ஆசிரியர்: காஞ்ச இலையா. மறு ஆக்கம்: குப்பண்ணன்)

'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பார்கள். 'மன்னன் எவ்வழி அவ்வழி மக்கள்' என்றும் சொல்வார்கள். அது முடியாட்சி. ஆனால் ஆர்.எஸ்.எஸ்.கும் பலோ 'இந்துமதகுரு எவ்வழியோ அவ்வழிதான் மன்னனும் மக்களும்' என்று சொல்கிறது. வெறுமனே சொன்னதோடு நிற்காமல் செயலிலும் காட்டி வருகிறது. நாடுமுழுக்க ரதயாத்திரை விட்டு ரத்தச் சேறாக்கியது; ராமன் செருப்பு ஊர்வலம் எடுத்து காங்கிரசை மிரட்டியது; எங்கெல்லாம் கலவரம் செய்ய முடியுமோ அங்கெல்லாம் நடத்தி, சிறுபான்மை முஸ்லீம் மக்களின் நெஞ்சங்களில் பயபீதியை விதைத்து வருகிறது.

ராமஜென்மபூமி விவகாரத்தை விசிறி, விசிறிப் பற்றவைக்கிறது ஆர்.எஸ். எஸ்.சும் அதன் குட்டிப்பேய்களும். ஒரு புறம் காங்கிரசோடு பேச்சுவார்த்தை நாடகம்; இன்னொருபுறம் ''எங்கள் பலத்தை வெளியே காட்டுகிறோம், பார்த்துக்கொள் '' என்று நேரடியாகவே பேட்டிகளில் மிரட்டுகிறார் ஜோஷி. சொல்லில் 'மதச்சார்பின்மை' செயலில் பார்ப்பனீய இந்துமத அரசு என்று இரட்டைவேடம் போடும் காங்கிரசோ 'ஐயோ மதவாதத்தால், பி.ஜே.பி. யால் தேச ,ஒற்றுமைக்கு ஆபத்து!' என்று கூக்குரல் போடுகிறது.

ஆர்.எஸ்.எஸ், பி.ஜே.பி. வி.எச்.பி, பஜ்ரங்தள், சிவசேனா, இந்துமுன்னனி வகையறாகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடிகிறது. ஆனால் மதச்சார்பின்மை என்ற கபடவேடம் போடும் காங்கிரசைத்தான் இந்த நேரத்தில் சரியாகப்புரிந்துகொள்ளவேண்டும். பிரதம மந்திரி நரசிம்மராவும் குடியரசுத் தலைவர் சங்கர்தயாள் சர்மாவும் தேய்ந்த இசைத்தட்டுப்போல திரும்பத் திரும்ப கொடுக்கும் அரசு அறிவிப்புகளை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் அவர்கள் இந்து மத விழாகளில் கலந்துகொண்டு பேசுவதையும், நடந்துகொள்வதையும், அவை பத்திரிக்கைகளில், டி.வி.ரேடியோவில் விளம்ரப்படுவதையும் அலட்சியப்படுத்திவிடக் கூடாது.

ஒரு பானைச்சோற்றுக்கு சிலசோறு பதம். நரசிம்மராவும், சங்கர்தயாள் சர்மாவும் நடந்துகொள்வதே அடிப்படை ஆதாரங்கள்.

செப்டம்பர் 29 நரசிம்மராவ் பிரதம மந்திரி என்ற அதிகாரத்தோடு ஐதராபாத் சென்றார்; 'சத்ய'சாயிபாபாவின் சாயி டிரஸ்ட் திருமண மண்டபத்தைத் திறந்து வைத்தார்; திருமண மண்டபத்தின் மதிப்பு 4 கோடி ருபாய்கள்; அதற்காக வருகைதந்த பிரதம மந்திரி, அவரது அரசுப்பரிவாரம், அவரது உற்றார் உறவினரின் பரிவாரங்கள், ஆந்திர முதலமைச்சர், ஆந்திர கவர்னர், அவர்களது பரிவாரங்கள் இவர்களின் செலவுகளைச் சேர்த்தால் பலலட்சங்கள் எட்டியிருக்கும்.

அந்த ஆடம்பர விழாவின் உச்சக்கட்டம் சாயிபாபாவின் 'தேவதரிசனம்'. முன்னால் அந்தரங்க தரிசனத்தில் பிரதமரும் ஆன்மகுருவும் என்ன பேசிக் கொண்டார்களோ, அது தேவனுக்கே வெளிச்சம். திறப்பு விழாவின்போது மேடையில் பிரும்மாண்டமாக உயர்ந்த மணிமுடிப் பீடத்தில் சாயிபாபா வீற்றிருந்தார்; அருகே கீழே வலப்பக்கம் பிரதமர்; இடப்பக்கம் மத்திய உள்துறை அமைச்சர்; பிரதம மந்திரியின் வலப்பக்கம் ஆந்திர கவர்னர், மாநில முன்னாள் முதலமைச்சர் சென்னாரெட்டி மற்றும் பிறர்; மத்திய உள்துறை அமைச்சருக்கு இடப்புறம் மக்களவை அவைத்தலைவர், ராஜஸ்தான் கவர்னர், கர்நாடக முதலமைச்சர் மற்றும் பிறர். சாயிபாபாவையும் பிரதம மந்திரி இருக்கையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அவர் மலை, இவர் எலி.

பிரதம மந்திரி பாபாவிடமிருந்து ஆசி வாங்குவதற்காகவே பேசினார்; மெய்சிலிர்த்தார், தொழுதார், பரவசமானார், உருகினார். 'தேவா, வெறியூட்டப்பட்டு அலைக்கழிக்கப்படும் இந்தநாட்டு மக்களைக் கடைத்தேற்ற மாட்டாயா?' என்று கெஞ்சினார்; தேசஒற்றுமையை, ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் சக்திகளிடமிருந்து நாட்டைக்காப்பாற்று என்று வேண்டிக் கொண்டார்.

பக்திக்குப் பலபடிகள் உண்டு. அதன் கொடுமுடி சரணாகதி என்பார்கள். தீவிர பக்தர்கள். பக்தர் உருகி உணர்ச்சிப்பெருக்காக வழிந்து, அங்கம், நிலம் தோய சர்வமும் அவனே என்று நெடுஞ்சாண்கிடையாக கீழே வீழ்கிறார். நரசிம்மராவும் சாயிபாபாவின் காலடியே சரணம் என்று விழுந்து, வணங்கி பாபாவின் காலைப்பிடித்துக் கொண்டார். அடுத்துவந்த அவரது எண்பத்தெட்டுப் பரிவாரமும் தொப்புத் தொப்பென்று முடுக்கிவிட்ட பொம்மைகள் போல விழுந்தன; வணங்கின.

சாயிபாபா என்ற ஒரு குடிமன்னன் காலடியில் இந்திய அரசையே காணிக்கையாக வைத்து வணங்கிவிட்டார் பிரதமர்.

மற்றொரு சம்பவம்; குடியரசுத்தலைவர் சம்பந்தப்பட்டது. சங்கர் தயாள்சர்மா பதவிக்கு வந்ததும் மொட்டைபோட்டுக் கொண்டார். எல்லா பக்தர்களோடும் ஒரு பக்தராக உட்கார்ந்து மொட்டைபோட்டார் என்று பத்திரிக்கைகள் 'சிலாகித்து' எழுதின. அதுகூடப்பெரிய விஷயம் அல்ல- சட்டையைக் கழற்றிப்போட்டு விட்டு தரையில் உருண்டுபுரண்டு வேண்டுதலை நிறைவேற்றினார் சர்மா. கடவுளை, கடவுளின் 'பிரதிநிதி'யாக அருகே நின்ற பார்ப்பனர்களை மகிழ்ச்சிக்கடலில் குளிப்பாட்டிவிட்டார் சர்மா. முப்படைக்கும் 'அதிபதி'யான நாட்டின் முதல் குடிமகன், அரசின் தலைமகன் இப்படிச்செய்யலாமா?

இன்னொரு சம்பவம்-இரண்டைவிட இது பலசிக்கலான பிரச்சனைகளை எழுப்பக்கூடியது. அரசு, மதம், மதகுரு இடையே உள்ள உறவு என்ன? இது 'ராமஜென்மபூமி' விவகாரம் சம்பந்தப்பட்டது.

நியாமாக முஸ்லீம்களுக்குச் சேர வேண்டிய பாப்ரி மஸ்ஜித் இடத்தில் ஜனவரியிலிருந்தே (கடந்த 10 மாதங்களுக்கு மேல்) வி.எச்.பி. குண்டர்களும், இந்துப் பண்டாரங்களும் ராமனுக்குக் கோயில் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். முழுக்க அது சட்டவிரோதமானது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் மீண்டும் மீண்டும் சடங்குத்தனமான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். மத்திய அரசோ அதுபற்றி கவலைப்படவில்லை. உத்தரப்பிரதேசத்தில் எந்த அளவு கோயில்வேலை நடைபெறுகிறது என்று நமக்கு தெரியாது என்றது. 'கோயில் கட்டப்படவேண்டும்; மசூதி இடிக்கப்படக் கூடாது' என்று மதில் மேல் பூனை நிலைப்பாட்டையே மறுபடி மறுபடி சொன்ன அரசு தடுத்து நிறுத்த ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. உ.பி.அரசு ஒத்துழைப்புத்தரவில்லை என்று சாக்குப் போக்கும் சொல்லியது.

''ராமர் கோயில் கட்டுவது செல்லாது'' என்று உ.பி. உயர் நீதிமன்றத்திலும், டெல்லி உச்ச நீதிமன்றத்திலும் வழக்குகள் தொடரப்பட்டன. உ.பி. உயர்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு வழங்கியது. ஆனால் உ.பி. அரசு அதை நடைமுறைபடுத்த முடியவில்லை. மாறாக, அப்படியே வி.எச்.பி.க்கு ஜாலரா அடித்தது. ''கட்டிட வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் சன்னியாசிகள், அதனால்தான் அவர்களது வேலை தடுக்கும் சட்ட நடைவடிக்கைகளை எடுக்கமுடியவில்லை'' என்று உ.பி. பி.ஜே.பி.அரசு தொல்லியது. பிறகும் கூட மத்திய அரசு தலையிடவில்லை.

சுருங்கச் சொன்னால் பி.ஜே.பி. காங்கிரஸ் அரசை 'இந்துத்துவ அரசு' என்ற நிலை நோக்கி தள்ளுகிறது. காங்கிரசோ 'பூனைக்கும் காவல் பாலுக்கும் தோழன்' நிலையில் கண்ணாமுச்சி காட்டுகிறது - இதுவே 'மதச்சார்பின்மை' என்ற அருபமான விளக்கம்.

சன்னியாசிகளை ராவ் பகைத்துக் கொள்ளவில்லை என்பதைவிட அவர்களை மனம் கோணாமல் நடத்தவே விரும்

படிப்பகம்

www.padippakam.com

பினார்.மேசைமுன்னால் அமர்ந்து பேச மாட்டோம், தரையில்தான் அமருவோம் என்றார்கள்; மனிதனின் 'நீச பாஷையில்' (கெட்டமொழியில்) பேச விரும்பவில்லை. 'தேவ பாஷையையே' விரும்பினார்கள். ராவ் அனைத்தையும் நிறைவேற்றினார். முன்னது அவர்களை மகிழ்விக்க; பின்னது, அவர்களது தேவரை மகிழ்விக்க.

இந்த விவகாரத்தில் சன்னியாசிகள் பிரதமரை மடக்கினார்கள். 'நாங்கள் மூன்று மாதக்கெடு தருகிறோம். அதற்குள் சாதகமான முடிவு வரவில்லையானால் கோயிலைக் கட்டுவோம்'. இதிலிருந்து என்ன தெரிகிறது? பேச்சு வார்த்தை வெறும் கண் துடைப்பு. வி.எச்.பி. கும்பலின் நோக்கம் கெடுப்போடுவது; தாங்கள் மேல் கையில் இருக்கிறோம் என்று மிரட்டுவது.

தால் அரசு-பிரதமர் தயங்குகிறார்கள். பூசாரிகள் சம்மதம் இல்லாமல் நீதிமன்றக் கட்டளையையே கூட செயல்படுத்தக் கூடாதாம். பூசாரிகளின் இருமல், தும்மல், ஏப்பம் உறுமல், முறைப்பு போன்ற சமஸ்கிருத உச்சரிப்புக்களுக்காக. தர்ம அ(ன)ர்த்தங்களுக்காக அரசு காத்திருக்கிறது.

உச்சநீதிமன்றம் இந்நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் வழியமைக்கப்பட்ட நிறுவனம். அதன் ஆணையையே ஒரு மாநில முதல்வர் தூக்கிப்போட்டு மிதிக்கிறார், ஏன்? சந்நியாசிகள் அப்பிரச்சனையில் சம்பந்தப்படுவதால், அவர்கள் மனம் புண்படக் கூடாதாம்; அவமதித்துவிடக் கூடாதாம்! ஒரு முதல்வர் அரசியல் அமைப்புச் சட்டத்தையே அவமதித்ததாக ஆகாதா? அவர் மீது ஏன் ராவ் நடவடிக்கை எடுக்கவில்லை?

முதலில் குடியரசுத் தலைவர், பிரதமர் போன்ற பதவிகள் வகிப்பவர்க்கு தனிப்பட்ட வாழ்க்கை அநேகமாக இல்லை என்றே சொல்லிவிடலாம்; அந்த அளவு சமூகப் பிரதிநிதியாக அவர்கள் வகிக்கும் வாழ்க்கை / அந்தஸ்து அவர்களின் அடையாளத்தை எடுத்துக் கொண்டுவிடும். இந்த இரு பதவியும் மிக முக்கியமானவை; அங்கே அவர்கள் ஏதேனும் செய்தால், பேசினால் அதை தேசமே கவனிக்கிறது அல்லது கவனிக்க வைக்கப்படுகிறது; அவை மக்களின் கருத்தைப் பாதிக்கின்றன. அவர்களது சொந்த வாழ்க்கையும் தேசத்தின் மக்களின் சோதனைக்குள் அடங்கும்; மக்களால் சோதிக்கப்படும்.

இரண்டாவதாக, வேறெந்த நபரும் தனது சொந்த விருப்பப்படி குறிப்பிட்ட ஒருவித உடை அணியலாம்; ஒருவித



நீங்கள் சாதாரணக் குடிமகன். ஒரு பொது நிகழ்ச்சி நடத்துகிறீர்கள். அதற்குச் சட்ட அனுமதி பெறவேண்டும். அனுமதி மறுக்கப்படுகிறது.மீறி நடத்துகிறீர்கள். சட்டம் என்ன செய்கிறது. உடனே வேட்டைநாயாகப் பாய்கிறது; குதறி எடுத்துவிடுகிறது. அதாவது, நடவடிக்கை எடுத்துக் கைதும் செய்வார்கள். ஆனால் இதையே வி.எச்.பி. கும்பல் செய்தால் அவர்கள் கையில் விலங்கு போடவில்லை; கைது செய்யப்படவில்லை; பூ விலங்கு போடுகிறார்கள்; கிரிமினல் கும்பலுக்கு எல்லா மரியாதையும் வரவேற்பும் தரப்படுகிறது.

ஒரு புறம்போக்கு நிலம் - அதில் ஏழைக்கூலி குடிசை போடுகிறான். அது அவனுக்குச் சொர்க்கம், ஆனால் அது சட்ட விரோதம். அவனது குடிசை பிய்த்து எரியப்படுகிறது; அவன் தண்டிக்கப்படுகிறான். ஆனால் இதையே வி.எச்.பி. செய்

அரசின் தலைவராக ராவ் நடந்து கொள்ளவில்லை; ஆனால் தனது பார்ப்பனச் சாதி. இந்துமத முறையைப் பயன்படுத்தி அந்தப்பாணியில் நடந்து காட்டுகிறார். நாட்டின் சட்டத்தையே பார்ப்பனப் பண்டாரங்கள் கால்களில் காணிக்கையாக்கினார்.

பிரதமரும், குடியரசுத் தலைவரும் இந்த சம்பவங்கள் மூலம் என்ன நிரூபித்தார்கள்? மதச்சார்பற்ற கோட்பாட்டையா அல்லது இந்துமதச் சமாதானத்தையா? இரண்டாவதைத்தான். காரணம், அவர்களின் சாயல், சார்பு, சாரம், குணம் அதுதான். புனிதம் என்று மக்களிடம் காட்டும் அரசியல் நிர்ணய சட்டத்தை அவர்களே மதிக்கவில்லை. இவை முறைதானா?

அது அவர்களின் தனிப்பட்ட விவகாரம், நீங்கள் எப்படிக் கேட்கலாம்? இது நம்மைப் பார்த்துச் சிலர் கேட்கும் கேள்வி.

உணவை உண்ணலாம். இதற்குச் சமமாக வைத்து குடியரசுத்தலைவர்/பிரதமமந்திரியின் சமய நம்பிக்கைகள், பாலியல் ஒழுக்கங்கள், பழக்கங்களைப் பார்க்கக்கூடாது.

எடுத்துக்காட்டாக, ஒரு குடியரசுத் தலைவர் தன் மனைவியோடு தனிவாழ்க்கையில் எப்படி நடந்துகொள்கிறார் என்பது உடனே தேசத்தின் பிரச்சனையாக மாறிவிடாது. ஆனால் அவரது மனைவியே சமூகத்தின் முன்னால் அப்படி ஒரு பிரச்சனை இருப்பதாக அறிவித்தால், எழுப்பினால் பிறகு அது தேசத்தின் பிரச்சனையாகவும் ஆகிவிடுகிறது. ஒரு குடியரசுத் தலைவர்/பிரதமர் பதவிக்கு வந்த பிறகு பலதாரமணம் புரிந்தால் சட்டப்படி அந்தப் பதவியிலிருந்து அவர்கள் தூக்கிஎறியப் பட வேண்டும்.

அதுபோலவே, ஒரு பிரதமர் அல்லது குடியரசுத் தலைவர் நாலுசுவருக்குள்ளே 'மரி



படிப்பகம்

www.padippakam.com

யாதைக்குரிய விதத்தில்' 'பூஜை' செய்வாரானால் அது ஒரு சமூகப் பிரச்சனையை எழுப்பாது; ஆனால் அது சமூகத்தின்முன் செய்யப்படும் போது, கூட வரும் அரசுப் பரிவாரமும் இந்துமதச் சடங்குகள், பழக்கங்களையே செய்ய நிர்ப்பந்திக்கப்படும் போது அது இந்துமதச் சார்பாகிவிடுகிறது.

இவர்களே பதவிக்காலம் முடிந்தோ, அல்லது வேறு அரசியல் 'திடீர்விபத்து' காரணமாகவோ வெளியே இருக்கும்போது யார்காலில் எவ்வளவு நேரம் விழுந்தார்கள் என்பது தேசிய நிகழ்ச்சியாகிவிடாது. ஆனால் அது தனிமனிதப் பிரச்னையானாலும் கூட அப்போது சுயமரியாதைப் பிரச்சனையாகிவிடும். எனவே, யார் என்பது கூட அல்ல, சடங்குகளையே எப்படிச் செய்தார்கள்என்பதுமுக்கியம்.கைகுலுக்கலாம்-அது சகமனிதரைச் சமமாகப் பாவிக்கும் மனிதத் தன்மை; காலில் விழுவது முற்றிலுமான அடிமைப் புத்தி. பிரதமர், சாயிபாபா போன்ற யார் காலிலும் விழுவது கேவலமானது; வெட்கித் தலைகுனிய வேண்டிய செய்தி.

இந்த விவகாரத்தில் அபாயகரமான இன்னொரு செய்தி உண்டு. கிரிமினல் வி.எச்.பி.க்கு அரசு விருந்தினர் அந்தஸ்து கொடுப்பது எதனால்? அவர்கள் வேறு மதத்துறவிகள் அல்லாமல் இந்துமதத் துறவிகளாக இருந்ததுதான். சட்டத்தைப்பற்றி அதன் நீள, அகல, உயரம், ஆழங்களை அலசும் பத்திரிக்கைகள், அறிவுஜீவிகள், அரசின் இந்துமதச் சாய்வு பற்றியோ, இந்துத் துறவிகள் சட்டவிரோதமாக அரசை அச்சுறுத்துவது பற்றியோ மூச்சுக்கூட விடவில்லை. மதவெறிப் பாசிசவாதிகளோடு சமரசம் பேச்சு வார்த்தையை முழுக்க ஆதரித்தனர்; பிரதமரின் முயற்சியைப் பாராட்டினார்கள். ஆனால், மூலாயம்சிங், லல்லு பிரசாத் இருவரும் இந்துவெறிக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இயக்கம் எடுத்ததை எதிர்த்து எழுதினார்கள்; இருவரும் விஷமிகளாக சித்தரிக்கப்பட்டார்கள்; அவர்களின் பார்வையில் மோதல் தவறு; சட்டவிரோத சமரசப்பேச்சே சரி.

ஆதாரங்கள், சாட்சிகளுக்கு மேலாக, சட்டத்துக்கு வெளியே அதற்குமேலாக இந்துமத நம்பிக்கையை வைத்து மக்களின் வாழ்வைச் சூதாடுகிறார்கள் மதவெறி ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி. கும்பல். குடியரசுத்தலைவர், பிரதமரின் ஒவ்வொரு செயலும் இதற்கே துணைபோகின்றன.

'மதச் சார்பின்மை' என்று நேருவிலிருந்து இன்றைய நரசிம்மராவ் வரை சொல்லிவரும் மோசடியை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தத் திரையின் பின்னே இந்நாட்டின் மிக உச்சமான அரசியல் அதிகாரம் இந்துமதவெறியை நீவிக் கொடுக்கிறது; அதோடு சமரசம் பேசுகிறது; மற்ற சிறுபான்மை மத உணர்வுகளுக்குஎதிராக நிற்கிறது.

விஞ்ஞான விளக்கம் தருகிறோம் என்ற பெயரில் ஒருசிலர் அரசு எல்லா மதங்களிலிருந்தும் சமதொலைவு இருக்கவேண்டும் என்று தவறாக விளக்கம் தருகிறார்கள். உண்மையில் மதச்சார்பின்மைக்கு ஒரே பொருள் உண்டென்றால் அது இப்படித்தான் இருக்கவேண்டும்: அரசோடு மதம் எந்தச்சிறு அணு அளவு கூட இணைக்கப்படக்கூடாது; பிரிக்கப்பட வேண்டும்; மத குரு கமண்டலத்தைத் துக்கி உயர்த்தி அரசுக்குக் கட்டளைகள் போடக் கூடாது.

இதை மனத்தில் வைத்துக்கொண்டு இந்துமத வெறிக்கெதிராகப் போரிடவேண்டும்; இதையே சாக்காக வைத்து மற்ற மத வெறிகள் தூண்டிவிடப்படும் என்பதையும் எச்சரிக்கை செய்து மக்களிடம் கொண்டு போக வேண்டும். மக்களின் ஓட்டைக் குறி வைத்துத்தாவும் காங்கிரஸ் பாசிசத்தின் பின்னே, நரசிம்மராவின் பின்னே இந்துத்துவம் ஒளிந்து கிடக்கிறது! ●



## இந்த ஆட்டத்திற்கு முற்றுப்புள்ளி இடுங்கள்

கடந்த ஒரு மாதகாலத்தில் சென்னை மற்றும் திருச்சி நகரங்களில் நடந்த சில நிகழ்ச்சிகள் நாடுபோகும் போக்கை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. பத்திரிக்கைகளில் வந்த செய்திகள் மட்டுமே இவை.

செப்டம்பர் 26,27,28: சென்னை திருவல்லிக்கேணி:
3 நாள் வேத சம்மேளனம். இதன் செய்திகள் வருமாறு:
சமஸ்கிருதம் பரப்பப்படவேண்டும்; வேதகலாச்சாரமே முன்பு பல இனக்குழுக்களை ஒன்றிணைத்து இருந்தது. சுதந்திரத்துக்குப் பிறகு அரசு இதைப் பயன்படுத்தாததால் உறவுகள் பலவீனமாகிவிட்டன.

அக்டோபர் 11: சென்னை மே.மாம்பலம் இந்து வித்யாலயத்தில் ஜெயேந்திரர் ராமபாதுகை வழிபாடு நடத்தினார். அங்கே அவர் உதிர்த்த புனித முத்துக்கள்: ''அயோத்தி முழுதுமே புனித இடம்; ராமன் பிறந்த இடத்தில் கோயில் கட்டக் கூடாதா? அயோத்தி கோயிலை வைத்து நாட்டுக்கு சரியான வழியைக் காட்டவேண்டும் என்பதே நமது லட்சியம்''. நிகழ்ச்சியில் பேசிய முன்னால் டி.ஜி.பி. ரவீந்திரன் பேசியது: ''பாரம்பரியமாகவே நமது நாட்டில் மதமும் அரசியலும் இணைந்தே வந்துள்ளன. அவ்வாறு இருந்திருந்தால் அயோத்தி பிரச்சனையே எழுந்திருக்காது.''

அக்டோபர் 12: காஞ்சி சங்கராச்சாரிக்கு நூற்றாண்டு விழா: பூர்வராக விழா எம்.எஸ்.சுப்புலட்சுமி (பாடகி) சென்னையில் தொடங்கிவைத்தார். நூற்றாண்டு விழாச் செய்திகளில் முக்கியமானவை வந்துள்ளன; ஜயேந்திரத் தலைமையில் தனிக்குழு; குடியரசுத்தலைவர் புரவலர், பழைய குடிரசுத் தலைவர் ஆர்.வெங்கடராமன் தலைவர்.

அக்டோபர் 17: காஞ்சி சங்கராச்சாரி நூற்றாண்டு விழாவை ஒட்டி அறக்கட்டளை, இதற்கு நிதி கொடுத்தால் வருமான வரி விலக்கு உண்டு.

அக்டோபர் 18,19: சென்னையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி உதவியுடன் சங்கராச்சாரி வாழ்க்கை பற்றிய படக்காட்சி நடந்தது. படங்கள் சங்கராச்சாரியின் பார்வைக்காக தனியே எடுத்துச் சென்று காட்டப்பட்டு பிறகு அவரே ஆசியுடன் சென்னைக்கு கொண்டு வரப்பட்டது.

அக்டோபர் 23,24: சமஸ்கிருத அறிஞர்கள் மாநாடு; திருச்சி, தமிழக ஆந்திர சமஸ்கிருத அறிஞர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். கட்டிடப்பொறியியல் (வாஸ்து), கம்ப்யூட்டரில் சமஸ்கிருதம் குறித்து விவாதிக்கப்பட்டது. ஒருமைப்பாட்டுக்கு அடையாளமான சமஸ்கிருதம் புறக்கணிக்கப் படுகிறது என்று அறிவிக்கப்பட்டது.

—இவை பொதுவான இந்து சமயப் பிரச்சாரங்கள் அல்ல. நேரடியாகப் பார்ப்பனர்களின் தலைமையில் நடத்தப்படும் சாதீயப் பிரச்சாரம். கொஞ்சம் வாழ்வு வந்தால் குடுமிகள் என்ன ஆட்டம் போடுகின்றன பார்த்தீர்களா?

படிப்பகம்

www.padippakam.com



வெற்றிக் களிப்பில் கிளிண்டன்

# அமெரிக்கத் தேர்தல்:

# விளம்பர மோசடியே!

"ஜனநாயகம் அதற்கொரு நல்ல கலங்கரை விளக்கம் அமெரிக்கா. அமெரிக்க தேர்தல் இதற்கொரு எடுத்துக்காட்டு". - இது நம்நாட்டில் பரப்பப்பட்டுள்ள கருத்து.

"இங்கே ஒரு நடிகன் ஆள வந்துவிடுகிறான். ஒரு எம்.ஜி.ஆர், சத்ருகன் சின்ஹா, ராஜேஷ் கன்னா, தீபிகா இன்னும் கண்டவனெல்லாம் தேர்தலுக்கு நிக்கிறான். பதவிக்கு வந்துவிடுகிறான். அங்கே, அமெரிக்காவிலே எல்லாம் படிச்சவுங்க. எல்லாமே நாகரிகமா, சாமர்த்தியமா நடக்குது" - சாதாரணமாக நம்மிடையே இந்தக் கருத்து விவாதிக்கப்படுகிறது.

"அங்கே பிரச்சனை இல்லாமல் இல்லை; குறைபாடுகள் இல்லாமல் இல்லை. எவ்வளவோ வன்முறை, எய்ட்ஸ் பிரச்சனை வரை இருக்கின்றனதான். அந்த அமைப்புக்குள்ளேயே சரிசெய்து கொள்கிறார்கள்" - அமெரிக்காவுக்கு இப்படிப்புகழாரம் சூட்டப்படுகிறது.

இங்கே, நம்நாட்டில் மக்களுக்கு அறிவில்லை; அதனால்தான் எந்த கட்சி வேண்டுமானாலும் எதையாவது சொல்லி ஏமாற்றி விடுகிறார்கள். நம் மக்கள் முட்டாள்கள். அவர்கள் அறிவாளிகள். அதற்கு ஏற்றாற்போல சமூகம் இருக்கிறது. அவர்கள் எதையும் அறிவுப்பூர்வமாகச் செய்கிறார்கள். இங்கே இல்லை. அது தேவையில்லை என்பதே இந்த வாதங்களின் பொருள்.

இது எவ்வளவு உண்மை? இது உண்மைதானா?

● ●

ஜனநாயக அரசாங்கத்தின் மீது மிக உயர்ந்த நம்பிக்கையை அமெரிக்க மக்கள் வைத்திருக்கிறார்கள் என்கிறார்கள். கடந்த தேர்தலில் மொத்தம் 54% தான் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள். தேர்தல் பிரச்சாரம்? - அது மிகமிகக் கேவலம்; அசிங்கம், ஆபாசம்.

ஒவ்வொரு தேர்லிலும் நாடு சந்திக்கின்ற பிரச்சனைகளைச் சொல்வார்கள். இந்தியாவை எடுத்துக் கொண்டால் பாப்ரிமஸ்ஜித் - ராம ஜென்மபூமி, புதிய பொருளாதாரக் கொள்கை, பஞ்சாப், காஷ்மீர், லஞ்சம் - ஊழல் என்று ஒரு பட்டியல் சொல்லலாம். அதேபோல, அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், தேசம் தழுவிய பல நெருக்கடிகள் உள்ளன.

அமெரிக்காவில் தொழில்துறை, பொருளாதாரத்துக்கு ஜப்பான் விடும் சவால்; ஜப்பானின் கண்டம்தாவும் வங்கிகள் (டி.என்.பி) அமெரிக்க வங்கிகளையும், தொழிற்சாலைகளையும் விலைக்கு வாங்கி விழுங்கி ஏப்பமிடுவதால் நெருக்கடிகள்; அமெரிக்கா உலகில் தொடர்ந்து மேல்நிலை வகிக்க வேண்டுமானால் ராணுவத்திற்கு பட்ஜெட் ஒதுக்கீடு செய்யலாமா - வேண்டாமா என்ற கேள்வி; உள்நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம், போதை, வெள்ளை இனவெறி, ஊழல், வரிகள் இப்படிப்பல பிரச்சனைகள் இருக்கின்றன.

இந்தப் பிரச்சனைகளை மக்களின் முன்னால் வைத்து, நெஞ்சாற தாங்கள் நினைக்கும் முடிவுகளையும் வைத்து இந்த அரசியல்வாதிகள் விவாதித்திருக்க வேண்டும். செய்தார்களா?

தேர்தல்கால டி.வி விளம்பரம் பிரச்சாரத்திற்கு மட்டும் புஷ் 40 கோடி ரூபாய், கிளின்டன் 20 கோடி ரூபாய், ராஸ் பெரோட் (சுயேச்சை வேட்பாளர்) 50 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். இதன் மூலம் பிரச்சனைகளை விவாதித்தார்களா?

இல்லை.

அப்படியானால் இந்த விளம்பர மோஸ்தரில் அப்படி என்னதான் இருக்கிறது?

எல்லா ரகசியமுமே அதில்தான் அடங்கியிருக்கிறது. ஆய்ந்து பார்ப்போமே!

● ●

விளம்பரத்தில் இரண்டு வகை உண்டு. சோப் விற்பனை விளம்பரம் ஓர் எடுத்துக்காட்டு. கடின நீர் என்றால் நுரை வராது; வரவில்லை என்றால் சோப்பின் தரத்தைக் கூட்டுவார்கள். இது ஒரு ரகம். உள்ளதை மாற்றாமல் சோப்பின் நிறத்தை மாற்றுவது, சுற்றியுள்ள தாளை மாற்றுவது, ஒருசோப் வாங்கினால் ஒரு ஸ்பூன் இலவசம் என்று விற்பது, குஷ்பு, ஸ்ரீதேவியை வைத்து விளம்பரம் கொடுப்பது - இது இரண்டாவது ரகம்.

இரண்டாவது ரகம்தான் அமெரிக்க தேர்தலில் பயன்படுத்தப்பட்டது. இது மாயக் கண்ணாடி, கண்கட்டு வித்தை; இல்



படிப்பகம்

www.padippakam.com

லாததைச் சொல்லி, மயக்கி ஏய்த்து கருத்தை உருவாக்கி வாக்காளரின் சிந்தனையை வார்த்து பொய்களை விற்கும் தந்திரம்; இதுவே விளம்பர ரகசியம்.

● ●

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக நின்ற கிளிண்டன் தேர்தலுக்கு எட்டு மாதங்களுக்கு முன்பே வழிநடத்திய ஆய்வாள நண்பர்களுடன் ரகசியக் கூட்டம் நடத்தினார். வாக்காளர்களின் முழுக்கவனத்தையும் இன்னமும் கிளிண்டன் பிடிக்கவில்லை; மக்களில் 'நம்பிக்கை'யைப் பெற ஒரு திட்டம் வேண்டும் என்று விவாதிக்கப்பட்டது. மூவர் கொண்ட நண்பர் குழு 'மன்ஹாட்டன் திட்டம்' என்ற ரகசியத்திட்டம் தீட்டியது.

கிளிண்டன் ஏன் குடியரசுத்தலைவராக விரும்புகிறார் என்பது மக்களுக்கு விளங்கவேண்டும். அதற்கு ஒரே வழி வாக்காளர்களோடு அவர் நேரடியாகப் பேசி விளங்கிக் கொள்ள வேண்டும்; அவர்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும்.

வியாபாரத்தில் ஒருபொருளை திறமையாக விற்க எடுத்துக்கொள்ளப்படும் 'குவிமையக் குழு' வைச் சந்திப்பது என்ற உத்தியை எடுத்துக்கொண்டார்கள். வேறு பிராண்டு வாங்கக் கூடியவர்களைத் தன்பக்கம் இழுக்க இந்த உத்தி பயன்படுத்தப் படுகிறது. 10 பெண்கள் அழைக்கப்பட்டார்கள்; அவர்களிடம் கிளிண்டனின் எளிய குடும்பப் பிறப்பு, நல்லபடிப்பு, கவர்னர் பதவி அடைந்த முயற்சிகள் எல்லாம் விளக்க விளக்க அவர்கள் ஏற்கெனவே வைத்திருந்த கருத்தை மாற்றிக் கொண்டார்கள்.

இந்தக் கண்டுபிடிப்பை வைத்து கிளிண்டன் பற்றிய சுவையான வாழ்க்கை விவரங்களை நாடு முழுக்கப் பரப்பினார்கள். அவரது படிப்பு, கிராப்பு வெட்டியிருக்கும் முறை, கவர்னர் பதவி ஆகியவற்றைப் பார்த்து அவரும் புஷ்ஷைப்போல மேட்டுக் குடி என்று கருதியிருந்தவர்கள் 'ஓ, இவர் நம்ம ஆள்' என்று மாற்றிக்கொண்டார்கள். அப்படியே பேசவும் ஆரம்பித்தார்கள்.

இதே நேரத்தில் ஜார்ஜ்புஷ் தனது (சதி) ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். அவர் எதற்காக மறுமுறை குடியரசுத் தலைவராக வர விரும்புகிறார்? அவருக்கே தெரியாது; அதில் அவருக்கு பிடிப்பு, ஈடுபாடு கிடையாது. ஆனால் அப்படி ஒரு கொள்கை, பிடிப்பு, பற்றுறுதி இருப்பதாக வாக்காளர்கள் நம்பும்படி செய்யவேண்டும். அவரது ஆய்வுக் குழு யோசித்தது.

அவரது லட்சியம், கனவு, திட்டம் 'அமெரிக்காவின் தொலைநோக்கு' என்று குழு தீர்மானித்தது. திட்டம் வேண்டும் என்பதற்காக இதை வைத்தார்களே தவிர அது என்ன என்று இல்லாமல்தான் சிந்திக்க வேண்டும் என்றார்கள்.

புஷ் நாட்டின் பொருளாதாரத்தைச் சின்னாபின்னமாக்கி விட்டார் என்று ஒரு கருத்து பரவலாக இருக்கிறது. ஈராக்குக்கு எதிராக பேட்ரியாட் ஏவுகணையைப் பாய்ச்சிய போது, அதிரடித் தாக்குதலை



தோல்வியில் துவண்ட புஷ்

மூர்க்கமாக நடத்தியபோது, அன்று வாஷிங்டனில் 10 லட்சம் மஞ்சள் ரிப்பன்கள் புஷ்ஷை வரவேற்றன. ஆனால் இப்போது உள்நாட்டு நெருக்கடியை ஒப்பிட்ட போது ஈராக்கின் மீதான தாக்குதலும் ராணுவச்செலவுகளும் அவசியமற்றவை என்று பலர் கருதத் தொடங்கிவிட்டார்கள். சதாமுக்கெதிராக புஷ் நடத்தியது போர் அல்ல, கசாப்புக் கொலை, ஒவ்வோர் அமெரிக்கனுக்காக 300 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டது கொடூரம் என்றார்கள்:

புஷ் இவற்றை மீறி பிரச்சாரத்தைத் தொடர்ந்தார். தான்செய்த செயல்களுக்கு விளக்கமோ, சமாதானமோ சொல்லவில்லை. தன் விற்பனைக்கான புதிய விளம்பரங்களைத் தொடங்கினார். கிளிண்டனைத் தாக்கினார்.

''மிதவாதிகள், ஓரினப் பெண்பால் சேர்க்கையினர், அதேபோல ஆண்பால் சேர்க்கையினர், ஜனநாயக வாதிகள், பெண்நிலைவாதிகள், குழந்தைகளைக் கருவிலேயே கொல்லும் பெண்கள் இவர்களின் மிகப்பெரும் படைக்குத் தலைமை யார் தெரியுமா? கிளிண்டனும், அவர் மனைவி ஹில்லரியும் தான்.''

புஷ்ஷுக்கு எதிராக பிரச்சாரத்திற்கு வேகமாக இறங்கிய கிளிண்டன் புஷ்ஷை விமர்சிக்க ஆரம்பித்தார்: ''புஷ்ஷின் பொருளாதாரம் மேலும் 4 வருடங்கள் நீடிக்குமானால் குடியரசு உடைந்துபோகும்.''

இதைக் கேள்விப்பட்ட துணைக்குடியரசுத் தலைவர் போட்டிக்கு புஷ்ஷுடன் இணைந்த கொயல் ''இதை இப்படியே விடக்கூடாது, முன்னாள் செனட்டர் ஜான் டவர் பாதுகாப்புத்துறைச் செயலாளர் பதவிக்குப் போட்டியிட்டபோது அவரது ஒழுக்கத்தைப் பரிசீலிக்க வேண்டும் என்று இந்தக் கழுதை ஜனநாயகவாதிகள் கேட்டார்கள். இப்போது இவர்களின் வேட்பாளர்களை நாம் சோதனை போடுவோம். இவர்கள் ஒழுக்கமானவர்கள் தானா?'' துள்ளினார்; அனல் மூச்சுவிட்டார்.

சதி தொடங்கியது. முன்பு கிளிண்டன் சாக்சபோன் இசைக்கலைஞராக இருந்த போது அவருக்குப் பழக்கப் பட்ட ஜெனிபர் பிளவர்ஸ் என்ற பெண் பாடகரோடு 12 ஆண்டுகள் தொடர்பு இருந்ததாக முதலில் பத்திரிக்கைச் செய்திவந்தது. அடுத்து, ஜெனிபரின் பேட்டி டி.வியில் வந்தது. முதலில் கிளிண்டன் மறுத்தார். பிறகு, மறுபடியும் ஒரு பேட்டி வந்தது - கிளிண்டன் வேறு வழியே இல்லாமல் இந்தப் பொய்யை, அவதூறை மறுக்க டிவியில் பேட்டி கொடுத்தார். 'அந்தப்பெண்ணோடு பழகியிருக்கிறேன். அதுநட்பு மட்டும்தான். அவரோடு நான் உடலுறவு கொள்ளவேயில்லை.'' வாக்காளர்கள் இதற்கு மேல் பெரிது படுத்தவில்லை.

புஷ் அடுத்த தாக்குதலைத் தொடங்கினார். ''மத்தியதர வர்க்கத்துக்குச் சலுகையாக வரியைவெட்டுவேன்'' என்று கிளிண்டன் அறிவித்ததை புஷ் கிண்டல் செய்தார். சாக்சபோன் கலைஞரான கிளிண்டனை 'டாக்சபோன் கலைஞர்' என்று கிண்டல் செய்தார். அப்படி வரியில் வெட்டு விழுந்தால் ஒரே ஒரு டாலர்தான் தேறும் என்று பொருளாதார நிபுணர்களை வைத்து கிளிண்டனுக்கு மறுப்பு கொடுத்தார். ''இது மக்களை ஏமாற்றும் மோசடி வேலை'' என்று கிளிண்டனைத் தாக்கினார் புஷ்.

தேர்தலுக்காக எதையோ சொல்லப் போய் இப்படி ஆகிவிட்டதே என்று புலம்பிய கிளிண்டன் ''சே! அந்த எழவெடுத்த மத்தியதர வர்க்க வரிவெட்டுச்சலுகை காலை வாரி விட்டதே. நான் வேண்டாம் என்றேன், ஆலோசகர்கள் பேச்சைக் கேட்டு மோசம் போனேன்'' என்று பல்டி அடித்தார்.

கிளிண்டன், கோர் (இவர் துணைக் குடியரசுத் தலைவருக்காக கிளிண்டனோடு இணையாக ஜனநாயகக் கட்சியில் போட்டியிட்டார்) இருவரையும் புஷ் இரண்டு கோமாளிகள் என்று கேலி செய்தார். 'இவர்களை நம்பியா ஓட்டுப்போடப்போகிறீர்கள்'?

பதிலுக்கு கிளிண்டன் ''கோமாளிகள் மக்களைச் சிரிக்க வைப்பார்கள். புஷ் மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் குறைத்து அழ வைத்துவிட்டாரே. எப்படியோ, தேர்தல் முடிவு அவர்களைச் சிரிக்க வைத்துவிடும். '' என்று அறிக்கைவிட்டார்.

''என் நாய் மில்லிக்குத் தெரிந்த அளவுகூட அயல் நாட்டுறவு பற்றி கோமாளிகளுக்குத் தெரிகிறது.'' என்று புஷ் சொல்ல, ''ஆகா, இப்போது தெரியாது'' உள் நாட்டுப் பிரச்சனை பற்றி கவலைப்படாமல் கண் மூடிச் செத்துக்கிடப்பது போல நடிக்க மில்லிதான் புஷ்ஷுக்குக் கற்றுக் கொடுத்ததோ?'' என்று கோர் பதில் சொல்ல டி.வி. தொடர்கள் விவாதத்தைச் சூடுபிடிப்பதாகக் காட்டின.

''வியட்நாம் போரின்போது அத்தனைக் குடிமக்களும் தேசபக்தியோடு படையில் சேர்ந்து போரிட்டார்கள். கிளிண்டன்

படிப்பகம்

www.padippakam.com

சேரவில்லை. பதுங்கிக் கொண்டார்'' - புஷ் அடுத்த அம்பை வீசினார்.

''ஆமாம் நான் அமைதியை நேசித்தேன். போரை எதிர்த்தேன். அதனால் படையில் சேரவில்லை'' என்று பதில் கொடுக்கச் சொன்னார் ஹில்லரி. ஆனால் தேர்தல் நயங்களையும், நயவஞ்சகங்களையும் சுவைத்துப் பழகி விட்ட கிளிண்டன் அவ்வாறு நேரடியாகப் பதில் சொல்லாது நழுவினார்; ''23 ஆண்டுகள் கழித்து ஷெர்லாக் ஹோம்ஸ் போலத் துப்பறிந்து எதையோ புதிதாகக் கண்டுபிடித்தவர்கள் போல எழுதுகிறார்களே அதில் என்ன இருக்கிறது சொல்லட்டும்!''

புஷ், கிளிண்டனை மட்டுமல்ல, சுயேச்சையாக நின்ற ராஸ் பெரோட்டையும் வம்பு செய்தார்; பழிவாங்கினார். டெக்ஸாஸ் மாநில லட்சாதிபதியான பெரோட் கம்ப்யூட்டர் தயாரிக்கும் கம்பெனி நடத்துபவர்; சொந்தப் பணத்தைச் செலவழித்துப் பிரச்சாரம் செய்தார்; முதலில் பின்வாங்கிவிட்டு மீண்டும் தேர்தலுக்கு நின்ற இவரது மகள் திருமணத்தை பணம் கொடுத்து வம்பு செய்து புஷ் முறித்துவிட்டார். பெரோட் அதையே மேடைக்கு எடுத்து வந்து அம்பலப்படுத்தினார். ''புஷ், கிளிண்டன் இருவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்.'' என்று ஒரே அடியில் இருவரையும் விமர்சித்தார். இவரது ஒரே மூலதனம்: அமெரிக்காவில் வளர்ந்து வரும் அரசியல்வெறுப்பு. இதற்காகவே இவர் தேர்தலில் நின்று சோதனை செய்திருக்கிறார். இதுவரை இல்லாத அளவு ஒரு சுயேச்சை வேட்டாளருக்கு 19% ஓட்டு கிடைத்திருக்கிறது.

அத்தனையையும் தூக்கியடிக்கும் விதத்தில் ஒரு கேலிக்கூத்து நடந்தது. கிளிண்டன் தன் பிரச்சாரத்தில் ஓரிடத்தில் ''ஒன்றை வாங்குங்கள், இன்னொன்று இலவசம்'' என்று தன் மனைவியை அறிமுகப்படுத்தியிருக்கிறார். பெண்களுக்கு உரிய சம அந்தஸ்து கொடுப்பதற்காக அப்படிச் சொன்னார் கிளிண்டன் என்கிறார்கள். அதாவது, ஒரே ஓட்டிலிருந்து இரண்டு தகுதியான நபர்கள் ஆட்சிக்கு கிடைப்பார்கள் என்பது அதற்குப் பொருள். ஆனால், புஷ் கூட்டாளிகள் அதை போலி வியாபாரம் என்றும், ஹில்லரியை வைத்து தனக்குச் சாதகமாக ஓட்டு கேட்கிறார் என்றும் தாக்கிப் பேச, கிளிண்டன் அதற்குப் பிறகு அவ்வாறு அறிமுகப் படுத்துவதை நிறுத்தி விட்டாராம்.

பெண் உரிமையை கிளிண்டன் விரும்பியிருந்தால் தொடர்ந்து அதை ஆதரித்து தான் பேசியது சரி என்று சொல்லியிருக்க வேண்டும். அதே வீச்சில் புஷ் பெண்களை அடக்கும் ஆதிக்கவாதி என்று தாக்கியிருக்க வேண்டும். கிளிண்டன் பயந்துபோய் பின் வாங்கிவிட்டார். சில லட்சியங்களுக்காக பல லட்சம் ஓட்டுக்களை இழக்கத் தயாராக இல்லை.

இத்தனை ஆபாசங்கள், வேடிக்கைகளைப் பார்க்கும் போது இந்தியாவிலிருந்து அமெரிக்கா என்ன வித்தியாசம் என்று கேட்கத் தோன்றுகிறது. 'இந்திய மக்கள் முட்டாள்கள் சுலபமாக யாரும் தேர்தலில் ஏமாற்றிவிடலாம்' என்கிறார்கள் சிலர். இந்திய மக்கள் 'சாதாரண முட்டாள்கள்' ஆனால் அமெரிக்க மக்கள் 'கம்ப்யூட்டர் முட்டாள்களா'' என்று கேட்கத் தோன்றுகிறது.

ஒரு சில எடுத்துக்காட்டுகள்: கிளிண்டன் பிரச்சாரத்தின் இலக்கோ, திசையோ தெரியாமல் தடுமாறிய ஆரம்பகட்டம்; அவரது ஆலோசகர் கிரீன்பெர்க், ரீகன் விரும்பிப் பயன்படுத்திய பிரச்சாரக் கருவியை எடுத்தார். பெயர்: அளவை மானி. இது மக்களின் கருத்தை அறிவதற்கானது. ஒரு பக்கம் டி.வி.பெட்டி இருக்கும். அதில் கிளிண்டன் பேசுவார்; மற்றொருபுறம் டி.வி. பேச்சைக் கேட்டு அதற்கு எதிரொலியாக தனது கருத்தை எடுத்துச் சொல்லும் வகையில் ஒரு மின்னணு ஊசியை அளவு கோலின் மீது வாக்காளர் நகர்த்த வேண்டும். 0 முதல் 50 வரை ஊசி நகர்த்தப்பட்டால் 'எந்தக் கருத்தும் இல்லை' என்பதிலிருந்து 'பரவாயில்லை' என்பதுவரை கணக்கிடப்படும்; 50 முதல் 100 வரை என்றால் மகிழ்ச்சி, அதிக மகிழ்ச்சி, சூப்பர் மகிழ்ச்சி என்று கணக்கிடப்படும்.

இது காதில் பூவா இல்லையா? வாக்காளன் என்ன வெள்ளை எலியா, ஆப்பிரிக்க கினியா, பன்றியா - இவர்கள் சோதனை நடத்த? மின்னணு ஊசியின் வழியாக வாக்காளனின் உணர்ச்சி, அனுபவம், கருத்து எல்லாம் வழிந்து ஓடுமா?

கிளிண்டன் மனைவி ஹில்லரி அழகுபடுத்திக் கொள்வதில் அக்கறை செலுத்தவில்லை என்று புஷ்ஷின் தூண்டுதலில் பத்திரிக்கைகள் எழுதின. தேர்தல் என்ன அழகுப்போட்டியா? தேர்தல் பிரச்சார மேடை என்ன அழகு ஜோடிப் போட்டி நடக்கும் இடமா?

இதெல்லாம் பிரச்சாரக் சரக்குகள் தானா என்று கேட்டக்கூடிய அளவு பிரச்சாரங்கள் மிக மோசமாக நடந்துள்ளன.

● ●



பிரோட்: மீண்டும் வருவேன் '96-ல்

புஷ், 'அமெரிக்காவின் தொலை நோக்கை'ப் பற்றிப் பேசினார். கிளிண்டன் 'அமெரிக்காவை மறுபடி இயங்க வைப்போம்' என்று முழக்கம் போட்டார். பெரோட் 'அமெரிக்காவின் பிரச்சனைகளைப் பாருங்கள்' என்றார்.

அமெரிக்காவை முன்பு 'சூப்பர் மேனாக'க் காட்டினார்கள். அந்த சித்திரம், படிமம் தேய்ந்து, இற்றுப்போய் பழசாகிவிட்டது. அப்போது அநியாயமான போர்களுக்குச் செல்வதற்கு வீரமூட்டித் தட்டி எழுப்ப அவசியமாக இருந்தது. அதே சித்திரம் இப்போதுள்ள உள்நாட்டுப் பிரச்சனைகளைச் சந்திக்கப் போதுமானதாக இல்லை. எனவேதான் 'நான் உங்களில் ஒருவன்; உங்களின் வேலைக்காரன்; குடும்ப ஊழியன்; உங்களின் தேவையை நிறைவேற்றும் ஊழியன்' என்ற புதிய சித்திரம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப மக்களின் சிந்தனை வார்க்கப்பட்டு தேர்தலும் நடத்தி முடிக்கப்பட்டது.

தேர்தலில் கிளிண்டன் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார். இதுவரை விமரிசனம் எழுதாத பத்திரிக்கைகள் இப்போது எழுதுகின்றன. ''புஷ் மறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு விட்டார்; ஆனால் தான் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டோம் என்பதற்கு ஒரு சரியான காரணத்தை கிளிண்டன் சொல்ல வேண்டும்.'' கிளிண்டன் தன்னைத் தயாரித்த ஆலோசகர்களைத் தான் கேட்பார். அதற்கும் ஏதாவது ஒரு விளம்பர உத்தியை அவர்கள் தேடிவிடுவார்கள்.

நிதி ஆதாரத்துக்கான எந்தத் திட்டங்களுமே இல்லாமல் அதைச் செய்கிறேன், இதைச் செய்கிறேன் என்று வாய்ப்பந்தல் போட்ட கிளிண்டன் இனிமேல் அமெரிக்கப் பணமுதலைகள் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஆடுவார். இதை எதிர்பார்க்கலாம். 'உங்களில் ஒருவன், சாமானியன்' என்ற குரல் தேர்தலுக்காகக் கொடுக்கப்பட்ட இரவல் விளம்பரக் குரல்; கிளிண்டன் போட்ட ஜீன்ஸும், சட்டையும் மிகமிகச் சாதாரண உடை, தேர்தலுக்காக . இப்போது அவர் நாட்டின் முதல் குடிமகன் — அவருக்காக உடை தைக்க ஜனவரியில் வெள்ளை மாளிகைக்கு இருநூறுக்கும் மேல் உடைகள் டிசைன் செய்பவர்கள் வரப்போகிறார்கள். அப்போது அவரது சாதாரண உடைகள் உருவப்பட்டுவிடும்.

● ●

அமெரிக்க மக்கள் ஏமாற்றிய, ஏமாற்றும் கண்கட்டு வித்தைகள் இன்னும் எப்படி எல்லாம் நடத்தப்படும்? எத்தனை நாளைக்கு நடத்தப்படும்? கரைந்து கரைந்து இனி கரையவே கரையாது என்ற எல்லை வந்துவிட்டது. 'யார் காதிலும் பூ சுற்றுவேன் நான்தான் சகலகலா வல்லவன்' என்பவனையே தேர்தலில் தேர்ந்தெடுக்கச் சொல்கிறார்கள். அடுத்து இந்த ஜனநாயக வித்தைகள் முற்றுப்புள்ளிக்கு வரும். வித்தைக்குப் பணம் கொடுத்தவர்களே நேரடியாக அடக்குமுறைப் பாசிச ஆட்சியை நிறுவுவார்கள். அதுவரை வித்தைகள் தொடரும்.

○ க.மு.



படிப்பகம்

www.padippakam.com

➔ 2-ம் பக்கத் தொடர்ச்சி

**கரூரில்:** புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி சார்பாக நவம்பர் புரட்சித்தினத்தை ஒட்டி அறைக் கூட்டமும், இந்து மதவெறி எதிர்ப்பு சுவரொட்டி இயக்கமும் நடந்தது.

**கேரளம் - வல்லக்கடவில்:** நவம்பர் புரட்சி விழா அரங்கக் கூட்டத்திற்கு தோழர் கிருஷ்ணன் தலைமையேற்க தோழர்கள் சாமி, ஜெயராஜ் சிறப்புரை ஆற்றினர். மூட நம்பிக்கைகளையும், எதிர்காலத்தின் மீது நம்பிக்கையற்ற போக்கையும் உருவாக்கும் நிலப் பிரபுத்துவத் திருவிழாக்களை அம்பலப்படுத்தியதோடு மனிதனையும் மனித உழைப்பையும் போற்றுவது இது போன்ற மக்களின் திருவிழாக்களே என்று பேசினார். விழாவுக்காக வீடுவீடாக அரிசி வாங்கி சமைத்து சுமார் 45 பேருக்கு விருந்து பரிமாறப்பட்டது.

**தேவாரம் - மீனாட்சி புரத்தில்** இதே போன்று நவம்பர் புரட்சி விழா நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும், கிராம அலங்காரம், ஒலிபெருக்கிப் பிரச்சாரமும் நடந்தன. ஆனால் கடும்மழைக்காரணமாக அரங்கக் கூட்டம் மட்டுமே சிறப்பாக நடந்தது.

**உத்தம பாளையம்:** பாட்டாளி வர்க்கத்தின் திருவிழாவான இந்நாளில் தோழர்களின் வீடுகள் செங்கொடியாலும், வண்ண விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டது. முன்னதாக சி.பி.எம்.,சி.பி.ஐ., தி.க. அமைப்புகளுக்கு, வி.வி.மு சார்பில் அழைப்பிதழ்களும், ஆதரவாளர்கள், நண்பர்கள், மாவட்டத்திலுள்ள கிளைகளுக்கும் புரட்சிதின வாழ்த்துகள் சிறப்பாக தயாரித்து அனுப்பப்பட்டது. விழா நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நாராயணத் தேவன்பட்டியின் மையப் பகுதியில் வி.வி.மு பேனர், கொடிகள் கட்டப்பட்டு தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தலைவர்கள் படங்களால் மெருகூட்டப்பட்ட அரங்கத்தில் மாலை 4 மணிக்கு தோழர் பழனிச்சாமி தலைமையேற்க முறையாக நிகழ்ச்சி தொடங்கியது. தி.க நண்பர்கள் சிலரும் விழாவில் கலந்து கொண்டனர்.

அரங்கத்திலிருந்து ஊர்வலமாக முழக்கமிட்டபடி சென்று, பஸ் நிலையத்தினருகில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கம்பத்தில் தோழர்: P.K.இராஜன் வி.வி.மு கொடியேற்றினார்.

விழா தொடக்கத்தில் நவம்பர் புரட்சி தினவிழா பற்றியும், இதை கொண்டாடுவதன் முக்கியத்துவம் பற்றியும் தோழர்: வசந்தன் பேசினார். விழாவில் உற்சாகமாக கலந்து கொண்ட தி.க வினர் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை விரிவாக செய்துவரும் வி.வி.மு மற்றும் புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் பத்திரிக்கைகளையும் பாராட்டினர். மேலும் 'இந்து மதவெறிக்கு எதிரான போராட்டத்தில் வி.வி.மு-வுடன் இணைந்து செயல்பட வேண்டிய' அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார்கள்!

சுமார் 3 மணி நேரம் நடந்த நிகழ்ச்சியில் வர்க்க ஒற்றுமை, கட்டுப்பாடு, மகிழ்ச்சி ஆகியவற்றை பிரதிபலிப்பதாக நிகழ்ச்சிகள் அமைந்தன. ●



## நவம்பர் புரட்சி நாள்

உழைப்பவனின்
கைரேகைகள்...
தேசத்தின்
முகவரியென்று
நிர்ணயிக்கப்பட்ட நாள்!

ஏழைகள்
உறக்கத்தில் கண்ட
சொர்க்கக் கனவுகள்
விழிப்பில்
நிஜமான நாள்!

சிவப்பு மழையினால்
ருஷ்ய மண்ணில்
பசுமை நிறங்கண்ட
புனித நாள்!

நட்சத்திரங்களின்
ஒளியை மட்டுமே
நம்பிக் கிடந்த
மக்களுக்கு
சூரியனை
அறிமுகப்படுத்திய
சரித்திர நாள்!

ஆணவத்தின்
அரண்மனைக் கதவுகள்
உடைக்கப்பட்ட நாள்!

வியர்வையின்
கண்ணீர்
துடைக்கப்பட்ட நாள்!

அந்த வசந்தத்தின்
கட்டியங் காரன்
லெனின்.

எங்கெங்கு சமத்துவ பூக்களின்
நறுமணம் வீசுகிறதோ...

அந்தப்
பூச்செடிகளெல்லாம்
அவனால்
பதியமிடப்பட்டவை.

வெளிச்சங்கள் தீண்டவும்
நிழல்கள்
விழித்துக் கொள்கிற மாதிரி...
அவன்
சிலிர்த்தெழுந்த போதுதான்
புரட்சி கண்விழித்தது
அந்த ஒளியைத் தேடித்தான்
எங்கள் பயணமும்.

-நிர்மலா
(திருச்சி நவம்பர் புரட்சிக்
கலைவிழா கவிதை)

## இனி ஒரு விதி செய்வோம்!

ஹலோ...யாரங்கே...
காந்தி, நேரு,
திலகர் எல்லோரையும் கூப்பிடு....
ஆடுவோம், பள்ளு பாடுவோம்!
பக்கத்தில் யாரது பட்டேலா,
சப்ளாக் கட்டையை
நல்லாத் தட்டு...
கோவிந்த நாம சங்கீர்த்தனம்
கோவிந்தா கோவிந்தா...!

உலகம் முழுதும்
முட்டாள்கள் தினம்
ஏப்ரல் 1...
இந்தியாவில் மட்டுமது
ஆகஸ்ட் 15...!

''சாரே ஜகா சே அச்சா
இந்துஸ்தான் ஹமாரா,
மேரா பாரத் மகான்
கித்னா படா கபரஸ்தான்!
வாழப்பனருக்கும் மூப்பாடிக்கும்
மன்னிக்கவும்,
வாழப்பாடிக்கும் மூப்பனாருக்கும்
வந்தேமாதரம்!

''தமிழன் என்று சொல்லடா,
தலை நிமிந்து நில்லடா...!''
இப்போது
தமிழன் என்று சொன்னால்
தடா வரும் பாரடா!

ஏய், தமிழனே!
உதட்டுக்கு மேலென்ன
மீசையா...?
சர்வேசா,
கண்ணீர் விட்டு வளர்த்த
பயிரா அது..இல்லை,
தானாக முளைச்ச மயிரு!

எங்கே நம் வீரம்?
எங்கே நம் கோபம்?
எங்கே நம் மொழி?
எங்கே நம் பண்பாடு?
எங்கே நம் இனம்?
இங்கே இனியும் நாம்
ஒரு விதி செய்வோமா..?

ஒருமைப்பாட்டு ஓட்டைச் சட்டிக்குள்
ஒளிந்து கொண்ட
பெருச்சாளிகளால்
களவாடப்பட்ட நம்
கலாச்சாரத்தை எங்கோ
குல்லாய்களுக்குள் தேடுகிறோமே
இங்கே இனியும் நாம்
ஒரு விதி செய்வோமா...?

முகங்களைத் தொலைத்து விட்டு
எந்த முக்காட்டுக்குள்ளோ
முகவரி தேடுகிறோமே
இங்கே இனியும் நாம்
ஒரு விதி செய்வோமா...?

-பசு.கவுதமன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 45, செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை-600049. அச்சிடுபவர்: பிரேம் பிரஸ், 107 ... பாதை (மேற்கு), சென்னை - 600 094 ...

படிப்பகம்

www.padippakam.com




## வா! தோழா வா!

தீயின் நாக்குகளில்
நமது
பெயர்களைப் பதிவுசெய்வோம்.

இருளின் தோலுரித்து
நமது விடியலுக்கு
செருப்பு செய்வோம்.

உழைப்பிற்குத் தகுந்த
ஊதியம் எடுக்க
உழைத்த நம் கரங்களுக்கு
உத்தரவு கொடுப்போம்.

கழித்தல் மட்டுமே அறிந்த
அவர்களது
கணித எந்திரங்களின் மூளையில்
கூட்டல் குறியை
செதுக்கிவைப்போம்.

பாவையரின் பார்வைக்கு
பரிச்சயமாக்கப்பட்ட
கனவுத்திரை கொளுத்தி
நிஜத்தின் நிறம் காட்டுவோம்.

நமது
நெருப்புப் பாதங்களின் நடையில்
இருப்பிடத்தை தொலைக்காதிருக்க
பாதைகளுக்கு 'லாடம்' கட்டுவோம்.

பின்-
விறகுகளில்
பூப்பூக்கட்டும்
பாறைகள்
பதுங்குகுழி தேடட்டும்.

## பிரளயம்

வயிற்றில்
பள்ளத்தாக்கு

புஜத்திலும் கன்னமேட்டிலும்
மலை முகடுகள்

உச்சியில்
விரிந்து காய்ந்த மரங்கள்

உடல் பரப்புகளில் ஓடும்
எலும்பு ரேகைகள்

கன்னக் கால்வாய்களில்
கண்ணீர் [illegible]

நீங்கள் சுமத்திய
வறுமைச் சுமையைத் தாங்க
பொறுமையுடன் வளைந்த முதுகு

ஆம்...
அவன்தான்
உண்மையில் மண்ணின் மைந்தன்

சற்று பொறுங்கள்...

பூமிக்கு
இன்னொரு குணமுண்டே

பொறுமைக்கு அருகில்
முற்றுப்புள்ளி முளைக்கும்போது

பேதம் ஏதுமின்றி
தவிடுபொடியாக்கி
விருந்தாய் விழுங்கும்
வீரப்பிரளயம்...பூகம்பம்.

பூமியின் பிள்ளையென்பதை
முழுதாய்க் காட்ட
புறப்பட்டுவிட்டான்.

நாளை தூரமென்பதால்
இதோ இன்றே!

## இறுதி

மேலத் தெருவில் பறை ஒலி
சாவுப் பறவை எச்சமிட்டது
எங்கே கொண்டு போவது

எல்லோரும்
தாவங்கட்டையில்
இடம் தேடினர்.

முன்பொரு பேய் மழையில்
ஆற்று வெள்ளம்
அரித்து விழுங்கியது
அவர்கள் இடுகாட்டை.

இன்னோர் இடமும் உண்டு.
அங்கே
கீழத்தெரு பிணம் மட்டுமே வேகும்.

பாடை திசை மாறியது
பொரியும் பூவும்
புதிய பாதையில் விழுந்தன.

காத்திருந்து வரவேற்றார்
கீழத்தெருவார்
கட்டாரி வேல்கம்பு சகிதம்

பின்
சுடுகாட்டில் பிணங்கள்
புதைக்க ஆளில்லை.

கொள்ளிச்சட்டி
கொழுந்துவிட்டு எரிந்தது
பெண்கள் குழந்தைகள்
ஆடுமாடுகளும் கருகின

ஊரே சுடுகாடாய் ஆனபின்
கருமாதி செய்ய
காவலர் வந்தார்.

-கனிவண்ணன்
('புதுக்கழுதை' தொகுப்பிலிருந்து
வெளியீடு: அகரம், சிவகங்கை)

படிப்பகம்